KALUBOWITIYANA TEA

ஆண்டறிக்கை

2019-20



களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

நோக்கு

இலங்கையின் மிகச்சிறந்த சீரீசீ மற்றும் மரபுரீதியான தேயிலையை உற்பத்தி செய்கின்ற மற்றும் சந்தைப்படுத்துகின்ற மிகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்மாதிரியாக மாறுதல்.

அரும்பணி

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக்கொண்டு உயர் தரமிக்க சுவையான மற்றும் பாவனையாளர் நேயமிக்க இலங்கைத் தேயிலையை உற்பத்திசெய்தல்.



பொருளடக்கம்

03 முகவுரை

கூட்டாண்மைத் தோற்றப்பாடு - களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் 03
எமது பயணம் 04
நிதிசார் முனையம்சங்கள் 06
நிதிசாரா முனையம்சங்கள் 07
தலைவரின் மீளாய்வு 08
பணிப்பாளர் சபை 10
கூட்டாண்மை முகாமைத்துவம் 11
தாபனக் கட்டமைப்பு 12

15 முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

தொழிற்பாடுசார்ந்த தகவல் 16
தொழிற்சாலைவாரியான இலாபம்கூ(நட்டம்) 18
மாதாந்த தேயிலை உற்பத்தி 19
வருடாந்த தேயிலை உற்பத்தி 20
மாதாந்த தேயிலைக் கொழுந்து கொள்வனவு 21
வருடாந்த தேயிலைக் கொழுந்து கொள்வனவு 22
ஒப்பீட்டுரீதியான விபரங்கள் – உற்பத்தி 24
உயரத்துடனான ஒப்பீட்டுரீதியான விற்பனை சராசரிகள் 26
உச்ச விலைகள் – 2019/20 28
நிதிசார் பகுப்பாய்வு 29
மனித மூலதனம் 30
சமூக மூலதனம் 31
பணிப்பாளர்களின் அறிக்கை 32

33 நிதிசார் அறிக்கைகள்

கணக்காய்வாளரின் அறிக்கை 34
இலாபம்கூ(நட்டம்) மற்றும் பிற விரிவான வருமானம் பற்றிய கூற்று 38
நிதி நிலைமை பற்றிய கூற்று 39
உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று 40
காசுப் பாய்வு பற்றிய கூற்று 41
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் – கணக்கீட்டுக் கொள்கைகள் 42
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் 47
நிதிக் கூற்றுகளுக்கான விபரமான அட்டவணைகள் 60
முந்திய பத்து வருடங்களின் நிதிசார் முனையம்சங்கள் 66

கூட்டாண்மைத் தகவல்கள் (உட்புற பின்பக்க உறை)

இந்த ஆண்டறிக்கையின் PDF வடிவத்தை எமது இணையத்தளமான http://www.ktfl.lk//annual report இல் பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டாண்மைத் தோற்றப்பாடு - களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் (கேரீஎப்எல்) 1982 இன் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டதும் 2007 இன் 07 ஆம் இலக்க புதிய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் மீள்பதிவுசெய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட கடப்பாடுகளைக்கொண்ட கம்பெனியாகும். சீரீசீ தேயிலையை உற்பத்தி செய்வதற்காகவே கம்பெனி நிறுவப்பட்டதோடு பங்கொன்று ரூபா. 10 வீதப்படியாக மதிப்பீடு செய்யப்பட்ட ஐந்து மில்லியன் பங்குகளைக் கொண்ட 50 மில்லியன் ரூபாவினைக்கொண்ட தொடக்க மூலதனத்துடன் அது 1994 ஒகத்து 01 ஆந் திகதி தனது வணிகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. இந்திய கடனுதவித் திட்டத்தின்கீழ் எமது இரண்டாவது தொழிற்சாலையான தேரங்கல தேயிலைத் தொழிற்சாலையும் நிறுவப்பட்டதோடு 2000 மார்ச்சு மாதத்தில் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. முன்னர் தேயிலைச் சக்தி நிதியத்தின்கீழ் நிலவிய எமது மூன்றாவது தொழிற்சாலையான ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை இலாபத்தை பகிர்ந்துகொள்ளும் உடன்படிக்கையின்கீழ் களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பெனிக்கு கையளிக்கப்பட்டது. சொந்த நிதியங்களை ஈடுபடுத்தி கம்பெனி இந்த தொழிற்சாலையை மீள்நிறுவியதோடு ஹினிதும தேயிலைத் தொழிற்சாலை 2012 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பாடுகளை ஆரம்பித்தது

கம்பெனிக்கு புதிதாக சேர்ந்த மெணிக்திவெல தொழிற்சாலை முன்னர் தேயிலைச் சக்தி மன்றத்திற்கு உரித்தானதாக இருந்ததோடு அது கண்டி மாவட்டத்தின் யட்டிநுவர தேர்தல் தொகுதியைச் சேர்ந்த மெணிக்திவெல கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த தொழிற்சாலையை மீண்டும் நிறுவுவதற்காக கம்பெனி தனது சொந்த நிதியங்களைப் பாவித்தது.

தேயிலைச் சிறுபற்றுநில உடைமையாளர்களிடமிருந்து கொள்வனவுசெய்த தெரிவுசெய்த தேயிலைக் கொழுந்தினைப் பயன்படுத்தி கம்பெனி அண்ணளவாக தரமிக்க 2,000,000 கிலோகிறாம் தேயிலையை வருடந்தோறும் உற்பத்தி செய்கின்றது.

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை வெட்டுதல், கிழித்தல் மற்றும் சுருட்டுதல் ஆகிய செயற்பாங்குகளை பாவித்து சீரீசீ தேயிலை வகைகளை உற்பத்தி செய்வதோடு தேரங்கல, ஹினிதும மற்றும் மெணிக்திவெல தொழிற்சாலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுரீதியான செயற்பாங்கினை பாவித்து இலைசார்ந்த மற்றும் சிறிய தரங்களைச் சேர்ந்த தேயிலை வகைகளை உற்பத்தி செய்கின்றன.

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டுக்கு சொந்தமான 4 ISO 22000/2005 சான்றிதழ்பெற்ற தொழிற்சாலைகள் மூலமாக உலக சந்தைகளுக்கான அதியுயர் தரம்கொண்ட புதிய லங்கா தேயிலை உற்பத்தி செய்யப்படுவதோடு தீவின் முதன்மை சீரீசீ தேயிலை உற்பத்தியாளர் என்றவகையில் களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் தகைமைகளுக்கு கணிசமான வர்த்தகப் பெறுமதியை சேர்க்கின்றது. உலக மட்டத்தீலான தேயிலை உற்பத்தியாளரொருவர் ஆவதற்கான தனது அர்ப்பணிப்பிற்கு வலுவூட்டி சாதகமான உற்பத்தி நடைமுறைகளுக்கு மேலதிகமாக களுபோவிட்டியான கம்பெனி குளோபல் கெப் சட்டகம், RA/UTZ தரநியமங்கள் மற்றும் வழிகாட்டல்களை உள்ளீட்ட சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உன்னதமான உற்பத்தி நடைமுறைகளை பயன்படுத்தி வருகின்றது.

கம்பெனியின் தேயிலை உற்பத்தியில் ஏறக்குறைய 90% தரகர்கள் ஊடாக கொழும்பு தேயிலை ஏலவிற்பனைக்காக முன்வைக்கப்படுவதோடு சிறிய ஒரு தொகை தலைமையகத்தில், தொழிற்சாலைகளில் மற்றும் நாடளாவியரீதியில் அமைந்துள்ள விற்பனை நிலையங்கள் ஊடாக உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது.

அமைப்பக விதிகளின் பிரகாரம் கம்பெனியின் ஆணைக்கட்டளை பின்வருமாறு அமையும்.

- செய்கையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்த தேயிலைக் கொழுந்தினை கிழித்தல், பதப்படுத்ததல், தயாரித்தல், செயன்முறைக்கு உள்ளாக்குதல் மற்றும் உற்பத்தி செய்யும் வணிகத் தொழில்முயற்சியை மேற்கொள்ளல்.
- தேயிலையை நடுகைசெய்தல், செய்கைபண்ணுதல் மற்றும் தேயிலைத் தோட்டங்களை முகாமைசெய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

வர்த்தகப் பெயரும் தேயிலை வகைகளும்

எளிதாக பாவனைக்கு எடுக்கக்கூடிய சிறிய பொதிகளில் அடைக்கப்பட்ட தேயிலை மூலமாக வேலைப்பளு மிக்க உலகிற்கு உண்மையான தேயிலை சுவையை வழங்க உதவுகின்ற பிஎப்1 களுபோவிட்டியான கம்பெனியின் சீரீசி தேயிலைகளின் மிகவும் தரமுயர்ந்ததாக அமைவதோடு கம்பெனி சீரீசீ தேயிலை உற்பத்தியில் தீவின் முதன்மையாளராகும். பீபீ 1 கணிசமான பெறுமதியைக்கொண்ட ஏனைய தரமாக அமைவதோடு அது உள்நாட்டு ரீதியாக சந்தைப்படுத்தப்படுவதோடு இந்நாட்டு பாவனையாளர் மத்தியில் பிரபல்யமடைந்து வருகின்றது.

தேரங்கல மற்றும் ஹினிதும தேயிலை அதன் கடுமையான நிறம் காரணமாக பிரபல்யமடைந்துள்ளதோடு அவிக்கவைத்தவிடத்து சிறப்பான செந்நிறம் அடைவதோடு அதன் தனித்துவமான சுவை ஏனைய ஆறு வலயங்களையும் பார்க்க வித்தியாசமான சுவை கொண்டது.

மெணிக்திவெல குறியீட்டின் கீழ் மரபுரீதியான தாழ்நில தேயிலை உற்பத்தி செய்யப்படுவதோடு அத்தேயிலை அதற்கே தனித்துவமான சுவையைக் கொண்டுள்ளது.

எமது உற்பத்திகள்

CTC

BP 1	PD	PF 1

மரபுரீதியான

FBOP 1	FBOPF	BOP 1	FBOPF 1
FBOP	BOP	OP 1	SILVER TIP
FBOPF SP	PEKOE	OP	

தரம்

எமது தேயிலை அவற்றின் உன்னதமான தரம் காரணமாக புகழ்பெற்றுள்ளதோடு ஏற்றுக்கொள்ளப்பட்ட தரச்சான்றிதழ், உற்பத்திப் பொறுப்பு, பாவனையாளர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் சான்றுப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உற்பத்திகளும் செயற்பாங்குகளும் இலங்கை தராதர ஏற்றங்கீகார சபையினால் விநியோகிக்கப்பட்ட ISO 22000/2005 மற்றும் HACCP உடன் முழுமையாக அமைந்தொழுகுவதோடு அதற்கு மேலதிகமாக அனைத்து தொழிற்சாலைகளுக்கும் சாதகமான உற்பத்தி நடைமுறைகள் பற்றிய சான்றுப்படுத்தல் உரித்தாகி உள்ளது. அனைத்துவிதமான களுபோவிட்டியான தேயிலை உற்பத்தி தொழிற்சாலைகளுக்கும் உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையை (ISO 22000/2005 மற்றும் HACCP) அமுலாக்குதல் மற்றும் பேணிவருதல் உற்பத்திப் பொறுப்பு தொடர்பிலான எமது பொறுப்பு பலப்படுத்தப்படுவதோடு உற்பத்திச் செயற்பாங்கின் தொடக்கத்தில் இருந்து இறுதி வரை தர நியமங்கள் பேணிவரப்படுவது உறுதிப்படுத்தப்படுகின்றது. கனரக உலோகங்கள் உள்ளவா என்பதைக் கண்டறிவதற்காக தேயிலையின் தரம் வருடாந்தம் பரிசீலனை செய்யப்படுகின்றது. நுண்ணுயிரியல்சார் தகவுதிறன்கள் மற்றும் விவசாய இரசாயன எச்சங்கள் ISO 3720 தரநியமத்தின் அவசியப்பாடுகளின் பிரகாரமானதாக அமைகின்றது.

எமது பயணம்

1992/93

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் தாபிக்கப்பட்டது

1994/95

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை தயாரிப்புத் தொழிற்பாடுகளை தொடங்கியது

1998/99

டிரான்ஸ் வேர்ல்ட் ஸ்டார் விருது – பொருளியல் கற்கைகள் நிறுவகம் – இந்தியா

2000/01

தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை தொழிற்பாடுகளை தொடங்கியது

2005/06

சீரீசீ தாழ்நிலப் பிரிவு அதியுயர் விற்பனை சராசரி – போர்ப் அன்ட் வோக்கர்ஸ் ரீ புறோக்கர்ஸ் (பிரை) லிமிரெட்

2006/07

அகில இலங்கை அதிகமான தடவைகள் உச்ச விலைகள் சீரீசீ தாழ்நிலப் பிரிவு – போர்ப் அன்ட் வோக்கர்ஸ் ரீ புறோக்கர்ஸ் (பிரை) லிமிரெட்

2009/10

மூன்றாம் இடம் – அதிகமான தடவைகள் உச்ச விலைகள் தங்கக் கிண்ண விருது

2010/11

ஆண்டுக்கான சிலோன் தனித்துவமான பெருந்தோட்டத் தேயிலை – ரசியா

2011/12

அகில இலங்கை அதிகமான தடவைகள் உச்ச விலைகள் சீரீசீ தாழ்நிலப் பிரிவு – போர்ப் அன்ட் வோக்கர்ஸ் ரீ புறோக்கர்ஸ் (பிரை) லிமிரெட்

2012/13

ஹினிதும ஹில்ஸ் தேயிலத் தொழிற்சாலை தொழிற்பாடுகளைத் தொடங்கியது



2013/14

தேசிய பெருந்தோட்ட விருது – மிகச்சிறந்த பாரியளவிலான தேயிலைத் தொழிற்சாலை

2014/15

ஆண்டுக்கான சிலோன் தனித்துவமான பெருந்தோட்டத் தேயிலை – துபாய் (தங்கம் மற்றும் வெள்ளி விருது பெறுனர்)

2015/16

கம்பெனியுடன் இறுதியாக இணைந்த தேயிலைத் தொழிற்சாலை மெணிக்திவெல ஆகும்

2016/17

ஆண்டுக்கான சிலோன் தனித்துவமான பெருந்தோட்டத் தேயிலை – சீனா

2017/18

நாங்கள் எமது புதிய தேயிலைப் பொதியை அறிமுகஞ் செய்தோம்

2018/19

இவ்வாண்டில் நாங்கள் மழைக்காடுகள் கூட்டிணைவு நிலைபெறுதகு சான்றிதழைப் பெற்றோம்

2019/20


நாங்கள் எமது புதிய வெப்தளத்தையும் எமது புதிய தேயிலைப் பொதியையும் தொடங்கினோம்

நிதிசார் முனையம்சங்கள்

மார்ச்சு 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்	2019/2020 ரூ.	2018/2019 ரூ.
வருவாய்	**937,789,275.06**	971,792,179.69
விற்பனைக் கிரயம்	**(845,680,912.50)**	(985,257,848.93)
மொத்த இலாபம்/(நட்டம்)	**92,108,362.54**	(13,465,669.24)
பிற தொழிற்பாட்டு வருமானம்	**7,201,625.87**	8,419,609.14
தொழிற்பாட்டு செலவுகளுக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)	**99,309,988.41**	(5,046,060.10)
நிருவாகச் செலவினங்கள்	**(50,712,394.91)**	(42,048,961.14)
விற்பனை மற்றும் விநியோக செலவினங்கள்	**(400,677.07)**	(3,116,553.01)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து இலாபம்/(நட்டம்)	**48,196,916.43**	(50,211,574.25)
நிதி வருமானம்	**14,724,355.11**	15,843,193.10
நிதிச் செலவினம்	**(19,653,694.91)**	(18,579,649.64)
தேறிய நிதி வருமானம்	**(4,929,339.80)**	(2,736,456.54)
வரிவிதிப்புக்கு முந்திய தேறிய இலாபம்/(நட்டம்)	**43,267,576.63**	(52,948,030.79)
வரிவிதிப்பு	**(5,535,371.27)**	4,167,928.45
வரிவிதிப்புக்கு பிந்திய தேறிய இலாபம்/(நட்டம்)	**37,732,205.36**	(48,780,102.34)
பங்கொன்றுக்கான இலாபம்	**8.19**	(10.52)


தேறிய விற்பனைகள்

(ரூ. மில்.)




தொழிற்பாட்டு செலவினங்களுக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)

(ரூ. மில்.)




வரிவிதிப்புக்கு பின்னரான தேறிய இலாபம்/(நட்டம்)

(ரூ. மில்.)




கொழுந்து வழங்கலாளர்கள்



மொத்தம்

3,453 வழங்கலாளர்கள்


கொழுந்து கொள்வனவு



மொத்தம்

6,947,074 Kg

தேயிலை உற்பத்தி




மொத்தம்

1,454,270 Kg

தொழிற்சாலை	கொழுந்து வழங்கலாளர்கள் (எண்ணிக்கை)	கொழுந்து கொள்வனவு (Kgs)	தேயிலை உற்பத்தி (Kgs)
– களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை	2,231	4,237,689	900,125
– தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை	798	1,399,915	290,262
– ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை	227	683,988	138,805
– மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை	197	625,482	125,078

2019 இல் இலங்கைத் தேயிலையின் இறக்குமதியாளர்கள்



தலைவரின் மீளாய்வு

2020 மார்ச்சு 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருடாந்த அறிக்கையை மிக்க மகிழ்ச்சியுடன் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். அந்நிய செலாவணியை ஈட்டுகையிலும் தொழில்களை வழங்கும்போதும் தேயிலைக் கைத்தொழில் இலங்கைப் பொருளாதாரத்தின் முக்கியமான செயற்பொறுப்பினை ஆற்றிவருகின்றது. ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக தேயிலைத் தொழிற்றுறை பிரதான தொழில் வழங்குனராகவும், அந்நிய செலாவணியை ஈட்டித்தருகின்ற பிரதானமான வருமானத் தோற்றுவாயாகவும், அரசாங்கத்தின் பிரதானமான வருமானத் தோற்றுவாயாகவும் விளங்குகின்றது. இலங்கைத் தேயிலைக்கு கிடைத்த சாதகமான விலைமட்டங்களின் கீழேயும் மீளாய்வுக் காலப்பகுதி இலங்கையின் தேயிலைத் தொழிற்றுறையைப் பொறுத்தமட்டில் சவால்நிறைந்த ஒன்றாக அமைந்தது. இலங்கையின் பொருளாதாரம் மீதான தேயிலைத் தொழிற்றுறையின் பங்களிப்பு படிப்படியாக நலிவடைந்து வருகின்றமை அண்மைக்கால புள்ளிவிபரங்கள் மூலமாக சுட்டிக்காட்டப்படுகின்றது. தேயிலைச் செய்கைக்காக ஈடுபடுத்தப்படுகின்ற காணியின் அளவு ஒரே இடத்தில் தேங்கி நிற்கின்றது அல்லது குறைவடைந்து வருகின்றது, மீள்நடுகை வீதம் தாழ்ந்த மட்டத்தில் நிலவுகின்றது, உற்பத்திக் கிரயம் உயர்வடைந்து காணப்படுவதோடு தொழிற்றுறையில் ஈடுபட விரும்புகின்ற உழைப்பாளிகளின் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதன் விளைவாக உலக தேயிலை ஏற்றுமதியில் இலங்கையின் பங்கு கணிசமான அளவில் குறைவடைந்துள்ளது.

உலகளாவிய சவால்கள்

2019 ஆம் ஆண்டுக்கான மத்தியவங்கி வருடாந்த அறிக்கைக்கிணங்க இலங்கையின் பொருளாதாரம் 2018 இல் நிலவிய 3.2% வளர்ச்சியுடன் சார்புரீதியாக 2.3% மொத்த மெய்த் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியை பதிவுசெய்துள்ளது. விவசாயம், காடுகள் மற்றும் மீன்பிடி சார்ந்த செயற்பாடுகளின் மொத்த மெய்த் தேசிய உற்பத்தி 2018 இல் நிலவிய 4.8% சுருக்கத்துடன் சார்புரீதியாக 2019 இல் 0.6% ஆல் சுருங்கியது.

முந்திய வருடத்தில் போன்றே பாதகமான வானிலை நிலைமைகள் விவசாயத்துறையின் பொருளாதார செயற்பாடுகள் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தின. சிலநேரங்களில் கடும் வறட்சியும் மற்றுமொரு சந்தர்ப்பத்தில் மிகையான மழைவீழ்ச்சியும் என்றவகையில் வானிலை இரண்டு துருவங்களில் ஊசலாடியது.

2019 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நிலவிய மிகையான வறட்சி நிலைமை காரணமாக மிகவும் பாதகமானதாக நிலவிய செயலாற்றுகைக்கு இணையான நிலைமையைப் பேணிவர பெரும் பிரயத்தனம் மேற்கொள்ளப்படவேண்டி நேரிட்டது. கிளைபோசேற் களைகொல்லியை மட்டுப்படுத்தியமை மற்றும் உழைப்புப் பற்றாக்குறை காரணமாக நிலைமை மேலும் பாதகமானதாக அமைந்தது. 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் ஒட்டுமொத்த தேயிலை உற்பத்தி 300.134 மெட்றிக் தொன்களாக அமைந்ததோடு அது முந்திய வருடத்தின் 300.843 மெட்றிக் தொன்னைப் பார்க்கிலும் 1.2% வீழ்ச்சியாகும். 2019 சனவரி தொடக்கம் திசெம்பர் வரை இலங்கையின் தேயிலை எற்றுமதி 2018 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான 282.3 மில்லியன் கிலோகிறாமிற்கு சார்புரீதியாக 292.6 மில்லியன் கிலோகிறாமாக அமைந்ததோடு தொகுதிவாரியாக ஏற்றுமதியை வகைப்படுத்துகையில் அது 10.3 மில்லியன் கிலோகிறாம் அதிகரிப்பாகும். 2019 சனவரி தொடக்கம் திசெம்பர் வரை 122.8 மில்லியன் கிலோகிறாமாக மொத்த கையிருப்புத் தேயிலையின் அளவு 2018 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான அளவான 122.4 மில்லியன் கிலோகிறாமுடன் ஒப்பிடுகையில் 0.4 மில்லியன் கிலோகிறாம் என்ற சிறிய வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

உலகளாவியரீதியில் எடுத்துக்கொண்டால் 2019 ஆம் ஆண்டில் இலங்கையின் மிகஅதிகமான தேயிலை இறக்குமதியாளராக துருக்கி மாறியதோடு ஈராக் மற்றும் ரஷ்யா இரண்டாம் மற்றும் மூனறாம் இடத்தை வகித்ததோடு ஈரான் நான்காம் இடத்தை

வகித்தது. லிபியா, சீனா, அசர்பைஜான், சிரியா மற்றும் ஐக்கிய அரபு எமிர் இராச்சியம் என்பவை கருத்திற்கொள்ளப்படவேண்டிய ஏனைய இறக்குமதியாளர்களாக விளங்கின. அதேவேளையில் ஐக்கிய அமரிக்கா, சவுதி அரேபியா, இந்தியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் இலங்கைத் தேயிலை இறக்குமதி 2018 ஆம் ஆண்டின் நேரொத்த காலப்பகுதியுடன் சார்புரீதியாக 2019 ஆம் ஆண்டில் கணிசமான வளர்ச்சியை வெளிக்காட்டியது.

கம்பெனியின் செயலாற்றுகை

சவால்நிறைந்த பின்னணியின் மத்தியில் கூட கம்பெனி மீளாய்வாண்டில் 938 மில்லியன் ரூபா வருமானத்தையும் 37.7 மில்லியன் ரூபா வரிவிதிப்பிற்குப் பிந்திய இலாபத்தையும் பதிவுசெய்தது.

எமது உபாயமார்க்கம்

தரமுயர்ந்த முடிவு உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்யும் பொருட்டான எமது அடிப்படை இலக்கு கீழே காட்டப்பட்ட சாதகமான உற்பத்தி நடைமுறைகளை உள்ளடக்கியதாகும். இந்த சூழமைவில் கம்பெனியின் இறுதி நோக்கத்தை அடையும்பொருட்டு மூலப்பொருட்கள், செய்முறைக்குள்ளாக்கல் மற்றும் சந்தைப்படுத்தலின் பேரிலான தரமிக்க அளபுருக்களுக்காக முகாமைத்துவம் தலைமைத்துவம் அளித்துவருகின்றது. மூலோபாயரீதியான பார்வைக்கோணத்தில் எடுத்துக்கொண்டால் விளைச்சலை மேம்படுத்தும் முயற்சியொன்றாக சாதகமான விவசாய மற்றும் உற்பத்தி நடைமுறைகள் சம்பந்தமாக தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வூட்டவும் அறிவினை மேம்படுத்தவும் அதன் மூலமாக இறுதியில் மிகவும் உயர்வாக மிகையான விலையைச் சேர்க்கவும் கம்பெனி கருதுகின்றது. ரன்தலு சங்கங்களை அறிமுகஞ் செய்ததன் ஊடாக தேயிலை சிறுபற்றுநிலப் பிரிவுடன் சுமுகமான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள கம்பெனி கருதியுள்ளதோடு களுபோவிட்டியான வர்த்தகப் பெயரின்கீழ் உள்நாட்டுச் சந்தையில் விற்பனைசெய்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விழிப்புணர்வினையும் புரிந்துணர்வினையும் விரிவாக்குகின்ற ஒரு வழிமுறையாக அறிவு விருத்தி மற்றும் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை விருத்திசெய்யும் பொருட்டு களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை தனது நிறைவேற்றுப் பணியாட்டொதிக்கும் ஊழியர்களுக்கும் ஏற்புடைய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்த உள்ளது. பலம்பொருந்திய கோட்பாடுகளின் அடிப்படையில் கம்பெனி தனது தொழிற்பாடுகளை பேணிவருவதோடு பணியாளர்களை தனது பெறுமதிமிக்க சொத்தாக கருதுகின்றது.

வருங்கால எதிர்பார்ப்புகள்

இலங்கைத் தேயிலையின் புலக்காட்சி சவால்நிறைந்ததாக புலப்படுகின்றது. பெரும்பாலும் பெற்றோலிய உற்பத்தி நாடுகளான எமது முன்னணி கொள்வனவாளர்களின் சந்தையில் நிலவுகின்ற உள்ளக மற்றும் வர்த்தக நிலைமைகள் தீர்வுக்கட்டமான காரணிகளாக அமைகின்றன. அநுகூலமான சுங்கத் தீர்வை சலுகைகளை பெற்றுக்கொள்வதற்கான இயலுமையைத் தோற்றுவிக்கின்ற உலக வர்த்தக அமைப்பின் உறுப்புரிமையை 2014 ஆம் ஆண்டில் ரஷ்யா உரித்தாக்கிக் கொண்டமை ஆக்கமுறையான காரணியாக அமைகின்றது. இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய தேயிலைக் கொள்வனவாளரான ஈரானுக்கும் ஐக்கிய அமரிக்காவிற்கும் இடையில் நிலவிய பதற்றநிலைமை குறைவடைந்தமையால் இலங்கைக்கு நன்மைகள் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் பொதுவில் மத்திய கிழக்கில் நிலவுகின்ற சமூக பொருளாதார நெருக்கடி கவலைதருகின்ற விடயமாக மாறியுள்ளது.

உள்நாட்டுரீதியாக எடுத்துக்கொண்டால் காலநிலை நிலைமைகள், தொழிலாளர் சம்பளம் மற்றும் உரமானியம் தொடர்ச்சியாக ஒரு சவாலாக நிலவுவதோடு அதற்கு சிறந்த முகாமைத்துவம் தேவைப்படுகின்றது. வருடம் பூராவிலும் கவரத்தக்கதாகவும் இடையறாமலும் உரமானியம் வழங்கப்பட்டபோதிலும் பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக உரிய நேரத்தில் பசளையிடுவது தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்கள் எதிர்நோக்கியுள்ள சவாலாகும். எம்மெதிரில் நிலவுகின்ற பிரமாண்டமான சவால் பற்றி நன்றாக விழிப்புணர்வூட்டப்பட்டு நாங்கள் ஆக்கமுறையான சிந்தனையுடன் புதுவருடத்தில் பிரவேசித்தோம். இற்றைவரை மேற்படி சிரமங்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு தொழிற்றுறையில் நிலவுகின்ற வசதியீனங்களின் மத்தியில் தொழில்வாண்மையுடனும் உபாயமார்க்கரீதியான இலக்கினைக் கொண்டதாகவும் நாங்கள் பல்வேறு வெற்றிகளை அடைந்தோம். அடுத்துறும் வருடத்திலும் மிகுந்த செயலூக்கத்துடன் அதனையொத்த அணுகுமுறையினை கடைப்பிடித்தால் பண்டச்சந்தையில் மாறிவருகின்ற நிலைமைகள், பிரதான ஏற்றுமதிச் சந்தைகளின் உறுதியற்றநிலைமைகள், வானிலை மாற்றங்கள் மற்றும் உற்பத்தித்திறனுடன் தொடர்பற்ற சம்பள அதிகரிப்பிற்கான கோரிக்கை ஊடாக தோன்றுகின்ற குறுங்கால மற்றும் மத்தியகால தாக்கங்களை இணக்கஞ்செய்ய எம்மால் இயலுமானதாக அமையும்.

நன்றி நவிலல்

பணிப்பாளர்சபையின் சார்பாக எமது அலுவல்களின் வெற்றிக்காக நாங்கள் நம்பிக்கை வைத்து செயற்படுகின்ற தேயிலை சிறுபற்றுநில உடைமையாளர்கள் பிரிவு போன்றே எமது தொழிற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்ற களுபோவிட்டியானவின் எமது பணியாட்டொகுதியினர் மற்றும் முகாமைத்துவத்திற்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாவேளைகளிலும் எமக்கு அறிவுறுத்தல் வழிகாட்டல்களை வழங்கி அளித்த தாராளமான ஒத்துழைப்பிற்காக கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் உத்தியோகத்தர்களைப் போன்றே அமைச்சு செயலாளருக்கும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கும் களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலையின் பணிப்பாளர் சபைக்கும் எனது நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எமது தேயிலைக்கு உரித்தாகவேண்டிய பெறுமதியை தொடர்ச்சியாக பெற்றுத்தருகின்ற தரகர் கம்பெனிகள் அனைத்திற்கும் எமது உற்பத்திகளைக் கொள்வனவு செய்பவர்கள் நல்கிய ஒத்துழைப்பிற்காகவும் எமது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறோம். பிறக்கின்ற வருடம் பல துறைகளில் சவால் நிறைந்ததாக அமைந்தபோதிலும் நம்பிக்கையுடன் முன்நோக்கி நகர்வதற்கான திடசங்கற்பத்தை எமக்கு அளிக்கின்ற எமது ஊழியர்களின், தரப்பினர்களின் மற்றும் அவர்களின் பலம்பொருந்திய பங்காண்மையின்மூலமாக நான் நம்பிக்கை அடைகின்றேன்.



அமிந்த றொட்ரிகோ
தலைவர்


பணிப்பாளர் சபை


தலைவர்	திரு. ஏ.என்.எஸ் புஸ்ஸல்லகே
தலைவர்	திரு. பீ.கே. அமிந்த உமேஷ் றொட்ரிக்கோ
நிறைவேற்றுப் பணிப்பாளர்	திருமதி. கே. சத்தரசிங்க
பணிப்பாளர்	திருமதி. டபிள்யு. ஏ. இந்திராணி சுகததாச
பணிப்பாளர்	திரு. எச். ஹேமா கஸ்தூரி ஆரச்சி
பணிப்பாளர்	திரு. பி. இராசையா
பணிப்பாளர்	திரு. ரி. பி. ரத்நாயக்க
பணிப்பாளர்	திரு. எம்.எம்.டி. திலகரத்ன

கூட்டாண்மை முகாமைத்துவம்

முகாமைத்துவப் பணிப்பாளர்/பி.நி.உ.	கலாநிதி எம்.என் ஜயவர்தன
முகாமையாளர்/நிதி	திருமதி எஸ்.ஏ. நிரோஷா லாலனி
முகாமையாளர்/நிருவாகமும் மனித வளமும்	திரு. ரி.டபிள்யு.எம்.எஸ்.பி. பண்டார
உதவி முகாமையாளர்/நிதி	திரு. பி. தெஹிவலகே
முகாமையாளர்/களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை	திரு. ரி.ஏ.டி.ஜே.சீ. திலகரத்ன
முகாமையாளர்/தேரங்கல தேயிலை தொழிற்சாலை	திரு. ரி. சிறிவர்தன
உதவி முகாமையாளர்/ஹினிதும ஹில்ஸ்தேயிலை தொழிற்சாலை	திரு. எல்.ஏ.டி.டி. நந்தசிறி
முகாமையாளர்/மெணிக்திவெல தேயிலை தொழிற்சாலை	திரு. ஆர்.ஜே.கே. ஹெட்டிஆரச்சி

தாபனக் கட்டமைப்பு


தலைவர்/பணிப்பாளர் சபை
முகாமைத்துவப் பணிப்பாளர்/பிநிஉ
முகாமையாளர் (ம.வ.ரூ நிரு.)
முகாமையார் (நிதி. ரூ. சந்தை.)
நிருவாக உத்தியோகத்தர்
த. தொ. உதவியாளர
முகாமைத்துவ உதவியாளர்கள்
சாரதிகள்
அலுவலக உதவியாளர்
உதவி முகாமையார் சந்தைப்படுத்தல்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
விற்பனை உதவியாளர்கள்
உதவி முகாமையாளர் நிதி
கணக்கு/ முகாமைத்துவ உதவியாளர்
முகாமைப் பணிப்பாளரின் பிரத்தியேக உதவியாளர்
உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்
கணக்காய்வு உதவியாளர்
தலைவரின் அந்தரங்க செயலாளர்


தொழிற்சாலை முகாமையாளர்
உதவி தொழிற்சாலை முகாமையாளர்
தொழிற்சாலை உத்தியோகத்தர்
பிரதம எழுதுனர்
விரிவாக்க உத்தியோகத்தர்
சிரே. உத. தொழிற். உத்தியோகத்தர்கள்
சிரே. உத. எழுதுனர்கள்
எலெக்ரீஷியன்/ மெக்கானிக்
உத. தொழிற். உத்தியோகத்தர்கள்
உத. எழுதுனர்கள்
களஞ்சியப் பொறுப்பாளர்
கனிட்ட தொழிற். உத்தியோகத்தர்கள்
கனிட்ட எழுதுனர்கள்
காவலாளி
சாரதிகள்
நாளாந்தச் சம்பள வேலையாட்கள்



முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

தொழிற்பாடுசார்ந்த தகவல் 16
தொழிற்சாலைவாரியான இலாபம்/(நட்டம்) 18
மாதாந்த தேயிலை உற்பத்தி 19
வருடாந்த தேயிலை உற்பத்தி 20
மாதாந்த தேயிலைக் கொழுந்து கொள்வனவு 21
வருடாந்த தேயிலைக் கொழுந்து கொள்வனவு 22
ஒப்பீட்டுரீதியான விபரங்கள் – உற்பத்தி 24
உயரத்துடனான ஒப்பீட்டுரீதியான விற்பனை சராசரிகள் 26
உச்ச விலைகள் – 2019/20 28
நிதிசார் பகுப்பாய்வு 29
மனித மூலதனம் 30
சமூக மூலதனம் 31
பணிப்பாளர்களின் அறிக்கை 32

தொழிற்பாடுசார்ந்த தகவல்

தலைமையகம்

முகவரி	இல. 556, நாகஹமுல்ல. பன்னிப்பிட்டிய வீதி, பெலவத்த, தலங்கம தெற்கு, இலங்கை.				
மனிதவளங்கள்	முகாமைத்துவப் பணிப்பாளர்	– 1	கணக்கு உதவியாளர்	– 2	
	முகாமையாளர்/நிருவாகம் மற்றும் ம.வ.	– 1	முகாமைத்துவ உதவியாளர்	– 11	
	பதில் நிதிப் பணிப்பாளர்	– 1	அலுவலக உதவியாளர்	– 3	
	உதவி முகாமையாளர் சந்தைப்படுத்தல்	– 1	சாரதி	– 4	
	உள்ளக கணக்காய்வு அலுவலர்	– 1			



களுபோவிட்டியான சீரீசீ தேயிலைத் தொழிற்சாலை

மாவட்டம்	மாத்தறை	உப மாவட்டம்	மொறவக்க
கிராமம்	களுபோவிட்டியான	உயரம்	தாழ் நிலம்
வியாபாரக் குறியீடு	களுபோவிட்டியான	உற்பத்தி வகை	சீரீசீ தேயிலை
மனித வளங்கள்	தொழிற்சாலை முகாமையாளர் – 1	தொழிற்சாலை பணியாளர் – 17	
	அலுவலக பணியாளர் – 6		



தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை

மாவட்டம்	மாத்தறை	உப மாவட்டம்	மொறவக்க
கிராமம்	கிரிவெல்கெலே	உயரம்	தாழ் நிலம்
வியாபாரக் குறியீடு	தேரங்கல/ கிரிவெல்கெலே	உற்பத்தி வகை	மரபுரீதியான தேயிலை
மனித வளங்கள்	தொழிற்சாலை முகாமையாளர – 1	தொழிற்சாலை பணியாளர் – 10	
	அலுவலக பணியாளர் – 3		




ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை

மாவட்டம்	காலி	உப மாவட்டம்	தவலம
கிராமம்	ஜெஸ்மின் வெளி	உயரம்	தாழ் நிலம்
வியாபாரக் குறியீடு	ஹினிதும ஹில்ஸ்/ தவலம ஹில்ஸ்	உற்பத்தி வகை	மரபுரீதியான தேயிலை
மனித வளங்கள்	தொழிற்சாலை முகாமையாளர் – 1	தொழிற்சாலை பணியாளர் – 6	
	அலுவலக பணியாளர் – 3		



மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை

மாவட்டம்	கண்டி	உப மாவட்டம்	யட்டிநுவர
கிராமம்	மெணிக்திவெல	உயரம்	மேற்கு நடுத்தர
வியாபாரக் குறியீடு	மெணிக்திவெல	உற்பத்தி வகை	மரபுரீதியான தேயிலை
மனித வளங்கள்	தொழிற்சாலை முகாமையாளர் – 1	தொழிற்சாலை பணியாளர் – 5	
	அலுவலக பணியாளர் – 4		


கண்டி
கொழும்பு
காலி
மாத்தறை

தொழிற்சாலைவாரியான இலாபம்/(நட்டம்)

களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிரெட்

பிரதேசத்தில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகள் மத்தியிலும்கூட 2019/20 நிதியாண்டில் களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை 4,237,689 கிலோகிறாம் விளைச்சலைப் பெற்றுக்கொண்டதோடு அது பெற்றுக்கொள்ள எதிர்பார்த்த விளைச்சலான 4,650,000 கிலோகிறாமின் 91.13% ஐ பதிவுசெய்திருந்தது. தாழ்நில மற்றும் சீரீசீ தேயிலை விலை அதிகரித்ததுடன் தவிர்க்கஇயலாத வகையில் தொழிற்சாலைகளுக்கிடையில் கடுமையான போட்டி நிலவியபோதிலும் 2019/20 ஆண்டிலும் களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலையே தொடர்ச்சியாக உச்சமட்ட விலையைச் செலுத்தியது. 2018/19 ஆண்டில் தொழிற்சாலை தனது மிகவுயர்ந்த தரமான PF1 இற்காக 22 உச்சமட்ட விலைகளைப் பெற்றுக்கொண்டதோடு அதியர்ந்த விலைகளைப் பெற்றுக்கொண்டமையால் உள்ளுர்ரீதியாகவும் சர்வதேசரீதியாகவும் நன்மதிப்பிற்கு இலக்காகியது.

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை நிதியாண்டில் 113.68 மில்லியன் ரூபா இலாபத்தை பதிவு செய்தது.

தனது தொழிற்சாலைக்கு தேயிலை சிறுபற்றுநில உடைமையாளர்கள் வழங்கிய பச்சைக் கொழுந்துக்காக நியாயமான விலையைச் செலுத்தியமையால் அவர்களின் வருமானத்தையும் வாழ்க்கைத்தரத்தையும் மேம்படுத்துவதில் களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை பங்களிப்புச் செய்தது.

தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை

மதிப்பீடுசெய்த விளைச்சலான 1,800,000 கிலோகிறாமுடன் சார்புரீதியாக தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை 1,399,915 கிலோகிறாமை பெற்றுக்கொண்டபோதிலும் 2019/20 நிதியாண்டின் இறுதியில் அது (1.22) மில்லியன் ரூபா கணிசமான நட்டத்தைப் பதிவுசெய்தது. இந்த பாதகமான பெறுபேறு தொடர்பில் தாக்கமேற்படுத்திய ஒரு காரணமாக அமைந்தது யாதெனில் உயர் தரத்திலான பச்சைக்கொழுந்து வழங்கலிலான மட்டுப்பாடாகும். அத்துடன் அது சவால் நிறைந்ததாகவும் அமைந்தது. அத்துடன் எதிர்பார்த்த உயர்தரங்கொண்ட தேயிலைக் கொழுந்தினைப் பெற்றுக் கொள்வதில் தொழிற்சாலைகளுக்கிடையில் நிலவிய போட்டித்தன்மையும் இதற்கு காரணமாக அமைந்தது. உயர்தரங்கொண்ட பச்சைத் தேயிலைக் கொழுந்தினை பெற்றுக்கொள்வதில் தொழிற்சாலை எதிர்நோக்கிய சிக்கல்களுக்கு கம்பெனி பரிகாரம் கண்டதோடு இந்தக்கூறின் இலாபத்தை உன்னதமான மட்டத்திற்கு கொண்டுவருவதற்கான மூலோபாயங்களை வகுப்பதில் ஈடுபட்டுள்ளது.

ஹினிதும தேயிலைத் தொழிற்சாலை

பாதகமான காலநிலை நிலைமைகள் காரணமாக தொழிற்சாலை 683,988 கிலோகிறாம் கொழுந்தினை மாத்திரம் பதிவுசெய்ததோடு அது மதிப்பீடுசெய்த விளைச்சலில் ஏறக்குறைய 68.38% ஆகும். ஆண்டுக்குள் புதிய கொழுந்து வழங்கல் வழிமுறைகளை அறிமுகஞ்செய்ய தொழிற்சாலை முகாமைத்துவம் முயற்சிசெய்ததோடு அதன் மூலமாக எதிர்காலத்தில் பெறுகின்ற கொழுந்தின் அளவு அதிகரிக்கும்.

உயரத்துடனான சராசரிக்கு உயர் தேறிய விற்பனை சராசரியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு தரமிக்க கொழுந்தினை மாத்திரம் ஏற்றுக்கொள்வது கம்பெனியின் நோக்கமாகும்.

மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை


பாதகமான காலநிலை நிலைமைகள் காரணமாக தொழிற்சாலை 625,482 கிலோகிறாமை மாத்திரம் பதிவுசெய்ததோடு அது மதிப்பீடுசெய்த விளைச்சலில் 50.03% மாத்திரமாகும். இவ்வாண்டில் கம்பெனி (15.87 மில்லியன் ரூபா) நட்டத்தைப் பதிவுசெய்ததோடு அதில் பல ஏதுக்கள் தாக்கமேற்படுத்தி இருந்தன. உயர் தரத்திலான கொழுந்து பெறுவதிலான சிரமங்கள், போட்டித்தன்மைமிக்க ஏனைய தொழிற்சாலைகளால் செலுத்தப்பட்ட செயற்கையான விலைமட்டங்கள் மற்றும் ஊழியர்களுக்கு அவசியமான திறன்கள் இன்மை என்பவை அவற்றுள் சிலவாகும். அவற்றுக்கு பரிகாரம் காண்பதற்கான நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொண்டு வருகின்றது. எதிர்காலத்தில் கணிசமான அளவிலான இறுதித் தயாரிப்பினை உற்பத்திசெய்யவும் அதற்கான உயர்ந்த விலையை பெற்றுக்கொள்ள இயலுமானதாக அமையுமென்பதையும் அதன்மூலமாக கம்பெனிக்கு இலாபமீட்ட இயலுமெனவும் முகாமைத்துவம் எதிர்பார்க்கின்றது.

	களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை (ரூ.)	தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை (ரூ.)	ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை (ரூ.)	மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை (ரூ.)
வருவாய்				
மொத்த விற்பனை	592,040,910.10	171,094,015.00	76,458,225.00	57,061,595.00
தரகும் விற்பனைச் செலவுகளும்	(6,960,405.82)	(2,874,698.44)	(1,284,538.11)	(1,103,425.40)
தேறிய விற்பனை	585,080,504.28	168,219,316.56	75,173,686.89	55,958,169.60
கூட்டுக - உள்ளுர் விற்பனை	21,252,199.73	2,319,737.05	1,801,303.59	2,016,222.36
மொத்த வருவாய்	606,332,704.01	170,539,053.61	76,974,990.48	57,974,391.96
விற்பனைக் கிரயம்				
கொள்வனவுசெய்த தேயிலை	427,449,410.06	125,544,934.27	62,736,320.77	41,757,404.71
உற்பத்திக் கிரயம்	75,1157,771.17	31,749,835.61	19,672,159.27	15,142,626.45
கூட்டுக: தொடக்க கையிருப்பு	31,810,617.87	21,903,302.28	13,813,371.04	17,493,710.,07
கழிக்க: இறுதிக் கையிருப்பு	44,636,630.24	21,997,224.72	7,469,199.70	5,278,027.29
கூட்டுத்தொகை	(86,368,094.06)	(29,427,930.97)	(21,005,153.96)	(5,821,026.00)
மொத்தம்	492,646,334.07	171,767,365.91	82,685,896.82	73,850,742.52
இலாபம்/(நட்டம்)	113,686,368.73	(1,228,312.30)	(5,710,906.34)	(15,876,350.56)


மாதாந்த தேயிலை உற்பத்தி

மாதம்	களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை (கி.கி)	தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)	ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)	மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)	கூட்டுத்தொகை (கி.கி.)
ஏப்பிறல் 2019	53,406	21,068	10,198	8,767	93,439
மே	69,740	28,453	12,634	19,532	130,359
யூன்	63,747	27,513	7,244	12,069	110,573
யூலை	68,566	26,725	8,466	13,552	117,309
ஓகத்து	81,159	34,874	14,594	12,285	142,912
செத்தெம்பர்	76,163	30,584	12,737	11,952	131,436
ஒற்றோபர்	79,576	27,273	12,295	9,665	128,809
நவெம்பர்	80,726	23,385	7,909	8,847	120,867
திசெம்பர்	107,435	26,373	11,173	10,272	155,253
சனவரி 2020	94,066	19,804	16,384	8,536	138,790
பெப்புருவரி	72,063	12,584	11,916	7,222	103,785
மார்ச்சு	53,478	11,626	13,256	2,379	80,739
கூட்டுத்தொகை	900,125	290,262	138,805	125,078	1,454,270


களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)




தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)



ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)



மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)




வருடாந்த தேயிலை உற்பத்தி

வருடம்	களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை (கி.கி)	தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)	ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)	மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)	கூட்டுத்தொகை (கி.கி.)
1994/95	536,780	–	–	–	536,780
1995/96	1,038,739	–	–	–	1,038,739
1996/97	1,082,973	–	–	–	1,082,973
1997/98	1,194,418	–	–	–	1,194,418
1998/99	809,741	–	–	–	809,741
1999/00	884,197	14,584	–	–	898,781
2000/01	914,433	494,894	–	–	1,409,327
2001/02	954,905	536,601	–	–	1,491,506
2002/03	1,039,447	636,762	–	–	1,676,209
2003/04	1,154,969	488,915	–	–	1,643,884
2004/05	1,173,659	361,154	–	–	1,534,813
2005/06	1,161,031	348,651	–	–	1,509,682
2006/07	1,272,903	278,828	–	–	1,551,731
2007/08	1,097,681	320,512	–	–	1,418,193
2008/09	967,631	227,617	–	–	1,195,248
2009/10	950,347	222,824	–	–	1,173,171
2010/11	994,746	269,314	–	–	1,264,060
2011/12	1,170,972	240,901	–	–	1,411,873
2012/13	1,110,907	254,706	168,425	–	1,534,038
2013/14	995,844	281,666	146,031	–	1,423,541
2014/15	943,706	315,854	171,751	–	1,431,311
2015/16	994,541	460,860	219,765	117,017	1,792,183
2016/17	811,708	429,382	253,157	209,464	1,703,711
2017/18	731,750	289,634	242,955	210,107	1,474,446
2018/19	807,843	276,186	174,272	202,120	1,460,421
2019/20	900,125	290,262	138,805	125,078	1,454,270
கூட்டுத்தொகை	25,695,996	7,040,107	1,515,161	863,786	35,115,050

கம்பெனியின் வருடாந்த தேயிலை உற்பத்தி


(மில். கி.கி.)




மாதாந்த தேயிலைக் கொழுந்து கொள்வனவு

மாதம்	களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை		தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை		ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை		மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை		கூட்டுத்தொகை	
	வழங்கலாளர் எண்ணிக்கை	வழங்கிய (கி.கி.)	வழங்கலாளர் எண்ணிக்கை	வழங்கிய (கி.கி.)	வழங்கலாளர் எண்ணிக்கை	வழங்கிய (கி.கி.)	வழங்கலாளர் எண்ணிக்கை	வழங்கிய (கி.கி.)	வழங்கலாளர் எண்ணிக்கை	வழங்கிய (கி.கி.)
ஏப்பிறல் 2019	1,952	253,252	733	102,769	262	50,740	264	42,487	3,211	449,248
மே	1,926	329,191	747	133,842	256	62,611	260	96,628	3,189	622,272
யூன்	1,934	301,568	761	130,362	247	35,471	260	59,304	3,202	526,705
யூலை	1,979	324,440	803	134,308	250	39,666	264	69,776	3,296	568,190
ஓகத்து	1,964	397,964	825	165,893	253	74,920	272	63,601	3,314	702,378
செத்தெம்பர்	2,026	368,752	846	149,167	241	62,838	270	61,492	3,383	642,249
ஒற்றோபர்	2,108	395,585	823	132,662	233	62,567	248	48,262	3,412	639,076
நவெம்பர்	2,208	384,195	805	113,605	226	39,897	248	44,794	3,487	582,491
திசெம்பர்	2,303	507,916	819	128,596	221	55,712	265	51,120	3,608	743,344
சனவரி 2020	2,332	433,270	805	95,182	243	78,979	264	41,826	3,644	649,257
பெப்புருவரி	2,271	313,656	753	58,482	236	57,617	259	34,854	3,519	464,609
மார்ச்சு	2,231	227,900	798	55,047	227	62,970	197	11,338	3,453	357,255
கூட்டுத்தொகை	25,234	4,237,689	9,518	1,399,915	2,895	683,988	3,071	625,482	40,718	6,947,074


களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)




தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)



ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)



மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை (கி.கி.)



வருடாந்த தேயிலைக் கொழுந்து கொள்வனவு

வருடம	களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை			தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை		
	அளவு (கி.கி)	வீதம் (ரூ.)	செலுத்திய தொகை (ரூ.)	அளவு (கி.கி)	வீதம் (ரூ.)	செலுத்திய தொகை (ரூ.)
1994/95	2,539,978	11.65	29,587,982.13	–	–	–
1995/96	4,758,850	13.50	64,251,776.63	–	–	–
1996/97	5,011,298	16.76	83,946,849.41	–	–	–
1997/98	5,619,161	21.49	120,746,103.55	–	–	–
1998/99	3,764,498	20.99	79,009,251.87	–	–	–
1999/00	4,092,958	20.54	84,059,716.54	68,377	21.00	1,435,917.00
2000/01	4,225,019	24.73	104,493,119.37	2,283,999	23.21	53,001,315.79
2001/02	4,406,549	25.76	113,531,489.13	2,452,187	23.33	57,224,296.34
2002/03	4,779,581	27.06	129,321,153.69	3,042,878	22.67	68,985,911.36
2003/04	5,316,428	29.28	155,642,831.99	2,274,012	23.82	54,158,850.23
2004/05	5,464,753	34.08	186,241,089.52	1,727,312	27.70	47,847,765.77
2005/06	5,362,732	36.30	194,683,064.10	1,688,298	29.11	49,302,770.60
2006/07	5,859,734	38.43	225,182,103.24	1,339,562	32.28	43,239,914.14
2007/08	5,061,084	51.08	258,498,237.53	1,559,138	46.93	73,165,311.51
2008/09	4,455,756	53.57	238,716,305.27	1,129,629	46.22	52,214,017.57
2009/10	4,406,749	62.57	275,722,181.37	1,114,004	57.22	63,746,050.83
2010/11	4,634,137	66.28	307,172,293.98	1,359,341	59.29	80,593,192.05
2011/12	5,421,437	69.59	377,269,886.08	1,136,937	58.20	64,713,552.59
2012/13	5,161,301	71.16	367,260,153.59	1,243,421	64.55	80,264,641.77
2013/14	4,638,578	80.13	374,733,726.05	1,386,298	74.78	103,673,719.50
2014/15	4,446,200	76.98	342,285,327.53	1,539,561	72.58	111,742,927.78
2015/16	4,774,872	65.73	313,847,559.85	2,249,785	61.38	138,094,577.16
2016/17	3,941,813	83.24	328,101,039.57	2,113,499	81.96	173,224,141.40
2017/18	3,499,414	104.54	365,832,985.62	1,474,475	99.04	146,034,388.15
2018/19	3,855,520	95.16	366,886,374.08	1,342,705	93.51	125,550,355.49
2019/20	4,237,689	100.87	427,449,410.06	1,399,915	89.68	125,544,934.27

	ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை			மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை		
	அளவு (கி.கி)	வீதம் (ரூ.)	செலுத்திய தொகை (ரூ.)	அளவு (கி.கி)	வீதம் (ரூ.)	செலுத்திய தொகை (ரூ.)
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	–	–	–	–	–	–
	838,887	65.05	54,569,118.77	–	–	–
	731,251	75.77	55,409,906.20	–	–	–
	834,380	72.16	60,205,968.18	–	–	–
	1,095,511	59.46	65,134,943.29	542,106	58.77	31,857,497.17
	1,235,080	81.32	100,442,354.51	1,033,573	67.62	69,894,090.60
	1,224,781	96.97	118,761,884.04	1,097,625	82.90	90,989,485.60
	875,077	91.24	79,841,933.04	1,023,085	73.86	75,565,752.59
	683,988	91.72	62,736,320.77	625,482	66.76	41,757,404.71

ஒப்பீட்டுரீதியான விபரங்கள் - உற்பத்தி

தாழ்நில சீரீசீ உற்பத்தி மற்றும் தேசிய சீரீசீ உற்பத்திக்கான பங்களிப்பு

மாதம்	சீரீசீ		உற்பத்தி களுபோ*	உற்பத்திக்கான பங்களிப்பு	
	தாழ்நிலம் (கிகி '000)	தேசிய (கிகி '000)	(கிகி '000)	தாழ்நிலம் (%)	தேசிய (%)
ஏப்பிறல் 2019	859	1,516	53.41	6.22	3.52
மே	1,033	2,434	69.74	6.75	2.87
யூன்	898	1,936	63.75	7.10	3.29
யூலை	935	1,971	68.57	7.33	3.48
ஒகத்து	1,176	2,213	81.16	6.90	3.67
செத்தெம்பர்	979	1,813	76.16	7.78	4.20
ஒற்றோபர்	1,280	2,036	79.58	6.22	3.91
நவெம்பர்	938	2,276	80.73	8.61	3.55
திசெம்பர்	1,052	1,977	107.44	10.21	5.43
சனவரி 2020	999	2,084	94.07	9.42	4.51
பெப்புருவரி	764	1,786	72.06	9.43	4.03
மார்ச்சு	705	1,457	53.48	7.59	3.67
கூட்டுத்தொகை	11,618	23,499	900.12	7.75	3.83

* களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை

தாழ்நில மரபுரீதியான உற்பத்தி மற்றும் தேசிய மரபுரீதியான உற்பத்திக்கான பங்களிப்பு

மாதம்	மரபுரீதியான உற்பத்தி			உற்பத்தி		உற்பத்திக்கான பங்களிப்பு		
	தாழ்நில (கிகி '000)	நடுத்தர (கிகி '000)	தேசிய (கிகி '000)	தேதேதொ*/ ஹிஹிதேதொ** (கிகி '000)	மெதேதொ*** (கிகி '000)	தாழ்நில (%)	நடுத்தர (%)	தேசிய (%)
ஏப்பிறல் 2019	13,700	3,171	21,896	31.3	8.8	0.23	0.28	0.18
மே	19,346	4,694	31,488	41.1	19.5	0.21	0.42	0.19
யூன்	15,721	3,634	25,311	34.8	12.1	0.22	0.33	0.19
யூலை	15,667	3,148	23,795	35.2	13.6	0.22	0.43	0.20
ஒகத்து	16,251	3,102	23,776	49.5	12.3	0.30	0.40	0.26
செத்தெம்பர்	13,784	2,619	19,959	43.3	12.0	0.31	0.46	0.28
ஒற்றோபர்	13,055	2,720	19,057	39.6	9.7	0.30	0.36	0.26
நவெம்பர்	12,362	3,213	21,509	31.3	8.8	0.25	0.28	0.19
திசெம்பர்	13,727	2,192	19,780	37.5	10.3	0.27	0.47	0.24
சனவரி 2020	12,326	2,775	19,690	36.2	8.5	0.29	0.31	0.23
பெப்புருவரி	9,501	2,704	16,259	24.5	7.2	0.26	0.27	0.20
மார்ச்சு	6,679	2,192	11,953	24.9	2.4	0.37	0.11	0.23
கூட்டுத்தொகை	162,119	36,164	254,473	429.1	125.1	0.26	0.35	0.22

* தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை ** ஹினிதும ஹில்ஸ தேயிலைத் தொழிற்சாலை *** மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை

தாழ்நில தேயிலை உற்பத்தி மற்றும் தேசிய தேயிலை உற்பத்திக்கான கம்பெனியின் பங்களிப்பு


மாதம்	மொத்த உற்பத்தி			கம்பெனியின் மொத்த உற்பத்தி	உற்பத்திக்கான பங்களிப்பு		
	தாழ்நில (கிகி '000)	நடுத்தர (கிகி '000)	தேசிய (கிகி '000)	(கிகி '000)	தாழ்நில (%)	நடுத்தர (%)	தேசிய (%)
ஏப்பிறல் 2019	14,559	3,171	23,412	93.4	0.64	0.28	0.40
மே	20,379	4,694	33,922	130.4	0.64	0.42	0.38
யூன்	16,619	3,634	27,247	110.6	0.67	0.33	0.41
யூலை	16,602	3,148	25,766	117.3	0.71	0.43	0.46
ஓகத்து	17,427	3,102	25,989	142.9	0.82	0.40	0.55
செத்தெம்பர்	14,763	2,619	21,772	131.4	0.89	0.46	0.60
ஒற்றோபர்	14,335	2,720	21,093	128.8	0.90	0.36	0.61
நவெம்பர்	13,300	3,213	23,785	120.9	0.91	0.28	0.51
திசெம்பர்	14,779	2,192	21,757	155.3	1.05	0.47	0.71
சனவரி 2020	13,325	2,775	21,774	138.8	1.04	0.31	0.64
பெப்ருவரி	10,265	2,704	18,045	103.8	1.01	0.27	0.58
மார்ச்சு	7,384	2,192	13,410	80.7	1.09	0.11	0.60
கூட்டுத்தொகை	173,737	36,164	277,972	1,454.3	0.84	0.35	0.52

உயரத்துடனான ஒப்பீட்டுரீதியான விற்பனை சராசரிகள்


தாழ்நில சராசரியுடனான ஒப்பீடு

மாதம்	தாழ்நில சராசரி	மாதாந்த சராசரி					
		களுபோவிட்டியான	வித்தியாசம்	தேரங்கல	வித்தியாசம்	ஹினிதும	வித்தியாசம்
	(ரூ.)	(ரூ.)		(ரூ.)		(ரூ.)	
ஏப்பிறல் 2019	608.43	588.94	(19.49)	670.26	61.83	665.49	57.06
மே	569.80	599.78	29.98	643.00	73.20	622.44	52.64
யூன்	526.88	593.55	66.67	594.04	67.16	603.94	77.06
யூலை	539.33	627.40	88.07	599.59	60.26	577.65	38.32
ஒகத்து	543.87	621.53	77.66	602.74	58.87	582.01	38.14
செத்தெம்பர்	545.31	761.45	216.14	587.89	42.58	594.16	48.85
ஒற்றோபர்	563.04	848.10	285.06	603.17	40.13	590.45	27.41
நவெம்பர்	600.08	849.37	249.29	615.22	15.14	620.79	20.71
திசெம்பர்	620.72	825.71	204.99	662.82	42.10	650.72	30.00
சனவரி 2020	629.37	782.11	152.74	670.10	40.73	670.33	40.96
பெப்ருவரி	630.65	678.02	47.37	689.76	59.11	683.46	52.81
மார்ச்சு	626.77	698.67	71.90	650.74	23.97	682.94	56.17


களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை – தாழ்நில சராசரியுடனான ஒப்பீடு (ரூ.)



தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை – தாழ்நில சராசரியுடனான ஒப்பீடு (ரூ.)




ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை – தாழ்நில சராசரியுடனான ஒப்பீடு (ரூ.)



நடுத்தர உயர சராசரியுடனான ஒப்பீடு

மாதம்	நடுத்தர உயர சராசரி (ரூ.)	மாதாந்த சராசரி	
		மெணிக்திவெல (ரூ.)	வித்தியாசம்
ஏப்பிறல் 2019	502.10	515.73	13.63
மே	458.26	473.95	15.69
யூன்	423.73	444.15	20.42
யூலை	399.37	433.33	33.96
ஒகத்து	435.31	441.32	6.01
செத்தெம்பர்	424.27	435.58	11.31
ஒற்றோபர்	425.28	461.52	36.24
நவெம்பர்	480.20	457.71	(22.49)
திசெம்பர்	487.10	484.63	(2.47)
சனவரி 2020	499.38	528.44	29.06
பெப்புருவரி	539.23	522.34	(16.89)
மார்ச்சு	528.47	519.28	(9.19)

மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை – நடுத்தர உயர சராசரியுடனான ஒப்பீடு (ரூ.)



உச்ச விலைகள் – 2019/20

திகதி	தரம்		தரகர்
	களுபோ		
	PF1 (ரூ.)	P. Dust (ரூ.)	
21 மே 2019	–	580.00	ஜோன் கீல்ஸ் பிஎல்சீ
03 யூலை 2019	–	620.00	பார்ட்லீற் புறோடியுஸ் மார்கெட்டிங் (பிரை) விமிடெட்
23 யூலை 2019	–	670.00	பார்ட்லீற் புறோடியுஸ் மார்கெட்டிங் (பிரை) விமிடெட்
13 ஒகத்து 2019	630.00	–	ஜோன் கீல்ஸ் பிஎல்சீ
20 ஒகத்து 2019	635.00	–	பார்ட்லீற் புறோடியுஸ் மார்கெட்டிங் (பிரை) விமிடெட்
04 செத்தெம்பர் 2019	730.00	–	போர்ப்ஸ் அன்ட் வர்க்கர்ஸ் (பிரை) லிமிரெட்
04 செத்தெம்பர் 2019	–	650.00	பார்ட்லீற் புறோடியுஸ் மார்கெட்டிங் (பிரை) விமிடெட்
11 செத்தெம்மபர் 2019	–	740.00	பார்ட்லீற் புறோடியுஸ் மார்கெட்டிங் (பிரை) விமிடெட்
25 செத்தெம்மபர் 2019	–	740.00	பார்ட்லீற் புறோடியுஸ் மார்கெட்டிங் (பிரை) விமிடெட்
02 ஒற்றோபர் 2019	–	700.00	லங்கா கொமொடிட்டி புறொக்கர்ஸ் லிமிரெட்
23 ஒற்றோபர் 2019	980.00	–	லங்கா கொமொடிட்டி புறொக்கர்ஸ் லிமிரெட்
06 நவெம்பர் 2019	–	720.00	பார்ட்லீற் புறோடியுஸ் மார்கெட்டிங் (பிரை) விமிடெட்
13 நவெம்பர் 2019	–	725.00	பார்ட்லீற் புறோடியுஸ் மார்கெட்டிங் (பிரை) விமிடெட்
30 திசெம்பர் 2019	850.00	–	ஜோன் கீல்ஸ் பிஎல்சீ
30 திசெம்பர் 2019	–	680.00	பார்ட்லீற் புறோடியுஸ் மார்கெட்டிங் (பிரை) விமிடெட்
08 சனவரி 2020	–	820.00	ஜோன் கீல்ஸ் பிஎல்சீ
15 சனவரி 2020	–	700.00	பார்ட்லீற் புறோடியுஸ் மார்கெட்டிங் (பிரை) விமிடெட்
15 சனவரி 2020	–	700.00	ஜோன் கீல்ஸ் பிஎல்சீ
22 சனவரி 2020	–	740.00	பார்ட்லீற் புறோடியுஸ் மார்கெட்டிங் (பிரை) விமிடெட்
29 சனவரி 2020	–	850.00	ஜோன் கீல்ஸ் பிஎல்சீ
11 மார்ச்சு 2020	–	750.00	மர்கன்டைல் புறொடியுஸ் புறோக்கர்ஸ் (பிரை) விமிடெட்
18 மார்ச்சு 2020	–	870.00	மர்கன்டைல் புறொடியுஸ் புறோக்கர்ஸ் (பிரை) விமிடெட்

வருவாய் பகுப்பாய்வு

தொழிற்பாட்டு இலாபமாக 48.1 மில்லியன் மற்றும் வரிவிதிப்பிற்கு பின்னரான இலாபமாக 37.7 மில்லியன் ரூபாவினை பதிவுசெய்து தலைசிறந்த நிதிசார் செயலாற்றுகையைக் கொண்டதாக நிதியாண்டினை நிறைவுசெய்தமை 2019/20 நிதியாண்டு களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வருடமாக அமைந்தது.

முந்திய நிதியாண்டில் ஈட்டிய 971 மில்லியன் ரூபாவுக்கு சார்புரீதியாக மீளாய்வாண்டில் கம்பெனி பதிவுசெய்த மொத்த வருமானம் 938 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு அது முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.51% வீழ்ச்சியைக் காட்டுகின்றது. விளைச்சல் முடிவுப்பொருள்மீது தாக்கமேற்படுத்திய பாதகமான வானிலை, ரஷ்யாவின் ஒருசில கொள்வனவாளர்கள் கென்யாவிலிருந்து சீரீசீ தேயிலையை கொள்வனவு செய்யத்தொடங்கியமை மற்றும் தமது தேயிலையை இயலுமானவரை தேயிலை சிறுபற்றுநிலங்கள் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்வதற்காக தேயிலைத் தொழிற்சாலைகளுக்கிடையில் நிலவிய கடுமையான போட்டிநிலை முந்திய வருடத்தைப் பார்க்கிலும் இவ்வருடத்திலும் நிலவிய பிரதானமான சவாலாக அமைந்தது. வருமான ஆக்கக்கூறினை எடுத்துக்கொண்டால் 53.4 மில்லியன் ரூபாவினை உள்ளடக்கிய உள்நாட்டு விற்பனை முந்திய வருடத்துடன் சார்புரீதியாக 32.9% வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

விற்பனைக் கிரயமும் தொழிற்பாட்டுச் செலவினங்களும்

845 மில்லியன் ரூபாவாக அமைந்த விற்பனைக் கிரயம் முந்திய நிதியாண்டுடன் சார்புரீதியாக 14.2% வீழ்ச்சியினைக் காட்டியது. எவ்வாறாயினும் ஆண்டுக்குள் பச்சைத் தேயிலைக் கொழுந்து கிரயம் அதிகரிக்கப்பட்டது. கொழுந்துக் கிரயத்துடன் தொடர்புடையதாக தனது உற்பத்திக் கிரயத்தையும் பொதுப் பணிக் கிரயத்தையும் குறைத்துக் கொள்வதில் கம்பெனி வெற்றிகண்டது.

பல்லின செலவு ஆக்கக்கூறுகளின் அதிகரிப்புக்கு அமைவாக நிருவாகச் செலவினங்கள் கடந்த வருடத்தின் 42 மில்லியன் ரூபாவுக்கு சார்புரீதியாக 50.7 மில்லியன் ரூபா வரை அதிகரித்தது.

பிற தொழிற்பாட்டு வருமானம்

பிற தொழிற்பாட்டு வருமானம் முந்திய நிதியாண்டில் பதிவாகிய 8.4 மில்லியன் ரூபாவிலிருந்து 7.2 மில்லியன் ரூபா வரை குறைவடைந்தது.

நிதிசார் கிரயம்

ஆண்டில் கம்பெனியின் நிதிச் செலவுகள் 19.6 மில்லியன் ரூபாவாக அமைந்தது. நடப்பு நிதியாண்டில் கம்பெனி 14.7 மில்லியன் ரூபா வட்டி வருமானத்தை ஈட்டியது. 2003 ஆம் ஆண்டில் பீசீசீ லங்கா நிறுவனத்திற்கு கம்பெனி வழங்கிய கடன் ஐந்தொகையில் தொடர்ச்சியாக நிலவி வந்ததோடு அதன் மூலமாக கம்பெனிக்கு வட்டி வருமானம் பிறப்பிக்கப்பட்டது.

நிதிநிலைமையும் திரவத்தன்மையும்

நடைமுறையல்லாச் சொத்துக்கள்

நடைமுறையல்லாச் சொத்துக்கள் மொத்தச் சொத்துக்களின் 31.5% வீதத்தை உள்ளடக்கியதாக அமைந்தது. மீளாய்வு செய்யப்படுகின்ற நிதியாண்டுக்குள் சாதனம் மற்றும் பொறித்தொகுதி, கணினி உபகரணங்கள், தளபாடங்களும் பொருத்திகளும் என்பவற்றுக்காக முதலீடுசெய்த பணத்தொகை 0.7 மில்லியன் ரூபாவாகும்.

கடன் - பீசீசீ லங்கா லிமிரெட்

2004 ஆம் ஆண்டில் பீசீசீ லங்கா கம்பெனிக்கு வழங்கப்பட்ட 10 மில்லியன் ரூபா கடன்தொகையும் அதற்கான திரண்ட வட்டியான 45.6 மில்லியன் ரூபாவை (மொத்தப் பணத்தொகை 55.6 மில்லியன் ரூபா) மீள் அறவிட்டுக் கொள்வதற்காக கம்பெனி பல முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் எதுவுமே வெற்றியளிக்கவில்லை.

தொழிற்படு மூலதனம்

ஐந்தொகைத் திகதியில் பண்டங்கள் பதிவேட்டில் சந்தைப் பெறுமதி பொதுவாக அதிகரித்தமை காரணமாக கம்பெனியின் நடைமுறைச் சொத்துக்கள் முந்திய வருடத்தில் நிலவிய 384.5 மில்லியன் ரூபாவிலிருந்து 429.6 மில்லியன் ரூபா வரை கணிசமான அளவில் அதிகரித்திருந்தது. குறுங்கால முதலீடுகள் 164.8 மில்லியன் ரூபாவிலிருந்து 167.1 மில்லியன் ரூபாவரை வீழ்ச்சியடைந்திருந்தது. "வர்த்தக சென்மதிகள்" அளவு முந்திய வருடத்தின் 79.4 மில்லியன் ரூபாவிலிருந்து 62.1 மில்லியன் ரூபாவரை வீழ்ச்சியடைந்தது. எனவே கம்பெனி தனது தொழிற்படு மூலதன வட்டத்தை திருப்திகரமான எல்லைகளுக்குள் முகாமை செய்திருந்தது.

மூலதனக் கட்டமைப்பு

சாதாரண பங்குகளின் எண்ணிக்கை

கம்பெனியால் 46,375,070.00 ரூபா பெறுமதிகொண்ட சாதாரண மூலதனப் பங்குகள் விநியோகிக்கப்பட்டன. முன்கொண்டுவந்த இலாபம் மூலமாக மீளாய்வு நிதியாண்டுக்காக தடுத்துவைத்த ஈட்டல்களும் ஒதுக்கங்களும் அதிகரிக்கப்பட்டன.

கடனெடுத்தல்கள்

கம்பெனி 55 மில்லியன் ரூபா தொழிற்படு மூலதனக் கடனை மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்டதோடு அதற்காக இலங்கை தேயிலைச்சபை 2% வட்டி மானியத்தை வழங்கியது.

இது கம்பெனியின் வங்கி மேலதிகப்பற்று வட்டி செலுத்துதலின் அளவினை குறைப்பதற்கு காரணமாக அமைந்தது.

பயிற்சி மற்றும் அபிவிருத்தி

மனித மூலதனத்தைக் கட்டியெழுப்புவதற்கான எமது முயற்சியின் அடிப்படையாக அமைவது பயிற்சியும் அபிவிருத்தியுமாகும். முகாமைத்துவம் தொடர்ச்சியாக திறமைகளின் குறைபாடுகளை மதிப்பீடுசெய்து நிரந்தரமான காலஇடைவெளிகளில் பணியாளர் குழாத்தின் திறமைகள் விருத்திசெய்யப்படுவதை உறுதிப்படுத்தும்பொருட்டு திறமைகளை மதிப்பீடு செய்கின்ற பெறுபேறுகளுக்கிணங்க பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மீளாய்வாண்டில் பணியாளர் குழாத்தின் தொழில்வாண்மைசார்ந்த மற்றும் தொழில்நுட்ப திறன்களின் மேம்பாட்டுக்காக கம்பெனி தனது ஊழியர்களுக்காக பல்வேறு பயிற்சி வாய்ப்புகளை வழங்கியது.

எமது ஊழியர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்காக கடைப்பிடித்த ஒரு முக்கியமான முறையியலாக அமைவது பணிக்காலப் பயிற்சியாகும். மேலும் கம்பெனியின் பல்வேறு பிரிவுகளில் செயலாற்றக்கூடியவாறு எமது பணியாளர் குழாத்தை வலுப்படுத்தம் பொருட்டு அவர்களுக்கு பலதரப்பட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன. அத்தகைய திறன்விருத்தி நடவடிக்கைமுறைகள் கம்பெனியின் நெகிழ்ச்சித்தன்மையை உயர்த்தியுள்ளதோடு திறன் பயன்பாட்டிலிருந்தும் உச்சஅளவுக்கு கொண்டுவருவதிலிருந்தும் அநுகூலங்களை பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. எமது ஊழியர்களுக்கு கம்பெனி ஊடாக எளிதில் இயங்கும்தன்மைக்கான பல வாய்ப்புகள் எற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதோடு தொழில்சார் அபிவிருத்தி வாய்ப்புவழிவகைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

நிறைவேற்றுத்தர அலுவலர்கள்/பணியாளர் குழாம்/ஊழியர்களுக்கான ஆண்டுக்குள் பயிற்சி நிகழ்ச்சிகள்:

- கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பிரதிபலிப்பு செய்தல், சரிசெய்வதற்கான நடவடிக்கை முறை மற்றும் செயலாற்றுகை கணக்காய்வு (PRAG நிறுவனம்)
- தொழிலாளர் முகாமைத்துவ சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்காக பணியாளர் குழாத்திற்கான பயிற்சி (PRAG நிறுவனம்)
- புதிய வரிச் சட்டம் பற்றி பணியாளர் குழாத்திற்கான பயிற்சி செயலமர்வு (இலங்கை வணிகப் பேரவை)
- அடிப்படைக் களஞ்சிய முகாமைத்துவம் பணியாளர் (PRAG நிறுவனம்)

மூலதன முதலீடுகள்

தனது போட்டித்தன்மையை பேணிவரும்பொருட்டு முறைமைகள், செயற்பாங்குகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் கொள்திறனை மேம்படுத்துதலை கம்பெனி காலத்துக்காலம் மேற்கொள்கின்றது. மீளாய்வாண்டில் அது சம்பந்தமாக ஒருசில கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு அவை கீழே காட்டப்பட்டுள்ளன:

- களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலைக்காக ஒருங்கிணைத்த கணினியொன்று கொள்வனவு செய்யப்பட்டதோடு கிரயம் 0.1 மில்லியன் ரூபாவாகும்.
- ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலைக்காக கணினி மற்றும் துணைச்சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. கிரயம் 0.1 மில்லியன் ரூபாவாகும்.
- களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலையின் எடைநிறுத்தல் நிலையத்திற்காக எவரி ரகத்தைச் சேர்ந்த இரண்டு காட்சி சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டதோடு கிரயம் 0.13 மில்லியன் ரூபாவாகும்.
- ஆண்டுக்குள் தலைமையகத்தில் இருந்து நான்கு தொழிற்சாலைகளை கண்காணிப்பதற்காக சீசீரீவி கமராக்களை பொருத்துவதற்காக 0.2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

தேயிலை சிறுபற்றுநில உடைமையாளர்களையும் பணியாளர் குழாத்தையும் ஊழியர்களையும் தனது பிரதான தரப்பினர்களாக கம்பெனி கருதுவதோடு மேற்படி பெறுமதிமிக்க தரப்பினர்களுடன் நெருக்கமாக தொடர்ச்சியாக செயலாற்றுவதை உறுதி செய்கின்றது. தனது தரப்பினர்களுடன் தீவிரமான நெருக்கத்துடன் செயலாற்றுவதன் மூலமாக கருதப்படுவது யாதெனில் அவர்கள் எதிர்நோக்குகின்ற சவால்களை கம்பெனி விளங்கிக்கொள்கின்றதென்பதும் தரப்பினர்களின் நன்மைகள் அவர்களின் மேம்பாட்டுக்காக தாபனஞ்சார் சமூகப் பொறுப்புக் கருத்திட்டங்கள் பலவற்றை பேணிவந்துள்ளதென்பதுமே ஆகும்:

சுகாதாரக் கவனிப்பு

கம்பெனியின் தரப்பினர்களின் சுகாதாரமும் நல்வழியுரிமையும் கவனஞ் செலுத்தப்படுகின்ற அடிப்படை விடயமாக அமைவதோடு ஒவ்வொரு வருடத்திலும் அவர்களின் நன்மைக்காக பல கருத்திட்டங்கள் ஈடேற்றப்படுகின்றன. அவை பின்வருமாறு அமையும்:

- தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்கள், பணியாளர் குழாம் மற்றும் ஊழியர்களின் வாழ்க்கைத்தரத்தை சாதகமானதாக மாற்றும் பொருட்டு மருத்துவ கிளினிக்குகளை நடாத்துதல் மற்றும் மூக்குக் கண்ணாடிகளை வழங்குதல்.
- தேயிலை சிறுபற்றுநில உடைமையாளர்கள், பணியார் குழாம் மற்றும் ஊழியர்களின் பங்கேற்புடன் கம்பெனி இரத்த தான இயக்கமொன்றை நடாத்தியது. நட்புறவினையும் ஒத்துழைப்பினையும் மேம்படுத்தும்பொருட்டு கம்பெனி தேயிலை சிறுபற்றுநில உடைமையார்களின் அனைத்து சமூகச் செயற்பாடுகளுக்குமான ஒத்துழைப்பினை காட்டுகின்றது.
- தோட்டத் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் தரமான சுகாதார சேவைகளை வழங்கும்பொருட்டு அவசரவேளை சுகாதார சேவைகள், தாய்மார் கிளினிக்குகள், ஈ.சீ.ஜீ. மற்றும் குருதி சீனி மட்டத்தை பரிசோதித்தலை உள்ளிட்டதாக கம்பெனி சுகாதார நிலையமொன்றை நடாத்தியது.

கல்வி மற்றும் மதம்சார் கருத்திட்டங்களும் பிற தாபனஞ்சார் சமூகப் பொறுப்பு செயற்பாடுகளும்

- அறிவினை அடிப்படையாகக்கொண்ட ஒரு கம்பெனியென்றவகையில் சிறப்புரிமைகள் குறைந்த மாணவர்களுக்கு நிதிவசதியீனங்கள் தொடர்பில் மனவேதனை அடையாமல் தமது கல்வி நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக ஒத்துழைப்பு வழங்க கிடைத்தமையானது கம்பெனிக்கு பெருமை தருகின்ற விடயமாகும். தேயிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் மற்றும் பணியாளர் குழாம் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு இவ்வாண்டில் நாங்கள் சாதாரண தர மற்றும் உயர்தர புலமைப்பரிசில்களை வழங்கியதோடு பாடசாலைகளுக்கு நிதிசார் அனுசரணைகளைகளையும் வழங்கினோம்.
- எமது அனைத்து தரப்பினர்களினதும் நலனோம்பலுக்காக தரநியமங்களை விருத்தி செய்யும்பொருட்டு ரன்தலு நலன்புரிச் சங்கங்கள் தாபிக்கப்பட்டன.
- தேயிலை சிறுபற்றுநில உடைமையாளர்களுக்காக தேயிலைச் செய்கை பற்றிய விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் நான்கு தொழிற்சாலைகளிலும் நடாத்தப்பட்டன.
- எமது மக்களின் சமய நாட்டங்களை மனதிற்கொண்டு சமயம் தனது தரப்பினர்களின் முக்கியமான வகிபாகத்தை ஈடேற்றுகின்றது என்பது தொடர்பில் கம்பெனி புரிந்துணர்வுடன் உள்ளதால் பணியாளர் குழாம் மற்றும் ஊழியர்களுக்காக அது மத யாத்திரையை ஏற்பாடு செய்வதன் மூலமாக அதற்கான வசதிகளை வழங்கி வருகின்றது.

பணிப்பாளர்களின் அறிக்கை

2020 மார்ச்சு 31 ஆந் திகதியில் முடிவுற்ற நிதியாண்டுக்கான கம்பெனியின் அலுவல்கள் தொடர்பிலான களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலைக் கம்பெனியின் பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

தொழில்முயற்சியின் தன்மை

செய்கையாளர்களிடமிருந்து கொள்வனவுசெய்த தேயிலைக் கொழுந்தினை பரிகரித்தல், நீண்டகாலம் வைத்திருக்ககூடியவகையில் தயாரித்தல், பதப்படுத்துதல், செயற்பாங்கிற்குள்ளாக்குதல் மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபடுதல் மற்றும் தேயிலையை செய்கை பண்ணுதல், நடுகைசெய்தல் மற்றும் தேயிலைத் தோட்டங்களை முகாமை செய்தலும் நிருவகித்தலுமே கம்பெனியின் பிரதானமான தொழில்முயற்சிப் பணிகளாக அமைகின்றன.

கம்பெனியின் செயலாற்றுகை

வருடாந்த அறிக்கையின் ஒரு பகுதியை ஆக்குகின்ற கணக்காய்வு அறிக்கையையும் உள்ளடக்கியதாக (இத்துடன் இணைக்கப்பட்டுள்ள) நிதி பெறுபேறுகள் பற்றிய கருத்துரைகளைக் கொண்டதாக ஆண்டுக்குள் கம்பெனியின் செயற்பாடுகள் மற்றும் அதன் செயலாற்றுகை பற்றிய மீளாய்வு நிதிக் கூற்றுகளில் அடங்குகின்றன.

நிதிக்கூற்றுகளை தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 42 தொடக்கம் 46 வரையான பக்கங்களில் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் காட்டப்பட்டுள்ளன.

கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள்

கம்பெனியால் முந்திய வருடங்களில் பின்பற்றப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளில் எவ்விதமான மாற்றமும் இன்றி தொடர்ச்சியாக பிரதியீடு செய்யப்பட்டுள்ளன.

வட்டிப் பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகள்

வட்டிப் பதிவேட்டில் உள்ளடக்கிய குறிப்புகள் 58 மற்றும் 59 ஆம் பக்கங்களில் "சார்ந்த தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள்" எனும் தலைப்பின்கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர்களுக்கான ஊதியங்களும் பிற நன்மைகளும்

2020 மார்ச்சு 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான பணிப்பாளர்களின் ஊதியங்கள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளின் 48 வது பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.

கொடைகள்

நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளின் 50 வது பக்கத்தில் காட்டப்பட்டுள்ளவாறு 2019 மார்ச்சு 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கம்பெனியின் மொத்த கொடைகள் ரூ. 379,275.41 ஆக அமைந்திருந்தது.

கம்பெனியின் பணிப்பாளர்கள்

2020 மார்ச்சு 31 இல் முடிவுற்ற நிதியாண்டில் கம்பெனியின் பணிப்பாளர்கள் பின்வருமாறு:


திருமதி ஐ. சுகததாச
திரு. கே.எச்.ஹேமபால
திரு. ஏ.என்.எஸ் புஸ்ஸெல்லகே - 2019.12.09 இல் இராஜிநாமா செய்தார்
திரு. பி. இராசையா - 2019.12.01 இல் இராஜிநாமா செய்தார்
திரு. ரீ.பி. ரத்நாயக்க - 2019.03.01 இல் இராஜிநாமா செய்தார்
திரு. எம்.எம்.டீ. திலகரத்ன - 2019.11.27 இல் இராஜிநாமா செய்தார்
திருமதி கல்யாணி சத்தரசிங்க - 2019.12.01 இல் இராஜிநாமா செய்தார்

கணக்காய்வாளரின் கட்டணங்கள்

மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டுக்கான கணக்காய்வாளரின் கட்டணங்கள் செலுத்தப்படவில்லை.

கணக்காய்வாளர் என்றவகையில் அல்லாமல் கம்பெனி தொடர்பிலான கணக்காய்வாளர்களின் ஈடுபாடு

அவர்களின் சுதந்திரத்தை பாதிக்கக்கூடிய எந்தவிதமான உறவுகளோ அல்லது ஈடுபாடோ கணக்காய்வாளர்களுக்கு கிடையாது என்பதில் பணிப்பாளர்கள் திருப்தியடைந்தனர்.



பணிப்பாளர்



பணிப்பாளர்



கம்பெனிச் செயலாளர்

2020 நவெம்பர் 26 ஆந் திகதி.

நிதிசார் அறிக்கைகள்

கணக்காய்வாளரின் அறிக்கை — 34

இலாபம்/(நட்டம்) மற்றும் பிற விரிவான வருமானம் பற்றிய கூற்று — 38

நிதி நிலைமை பற்றிய கூற்று — 39

உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று — 40

காசுப் பாய்வு பற்றிய கூற்று — 41

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் – கணக்கீட்டுக் கொள்கைகள் — 42

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் — 47

நிதிக் கூற்றுகளுக்கான விபரமான அட்டவணைகள் — 60

முந்திய பத்து வருடங்களின் நிதிசார் முனையம்சங்கள் — 66

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. } சீஎல்ஏ/பீ/கேரீஎப்எல்/01/2019/20/03

මඟේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date } 2020 நவெம்பர் 17

தலைவர்
களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்

2020 மார்ச்சு 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் நிதிக் கூற்றுகள் மற்றும் பிற சட்டமுறையான ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ("கம்பெனி") 2020 மார்ச்சு 31 ஆந் திகதியிலான நிதி நிலைமை பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, இலாப - நட்டக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்வுக்கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுடன் தொடர்புடைய குறிப்புகள், பொழிப்பாக தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கியதாக 2020 மார்ச்சு 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2019 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக கம்பெனியின் 2020 மார்ச்சு 31 ஆந் திகதியிலான நிதிநிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிசார் செயலாற்றுகையும் காசுப் பாய்வும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டப்படத்தக்கவகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்களில் இடமளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்ந்ததாக சொத்துக்களும் பொறுப்புக்களும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படலாகாதெனினும் 2020 மார்ச்சு 31 இல் ரூ. 186,556 ஆக அமைந்த வருமதியான மீதிகள் சென்மதியான மீதிகளிலிருந்து எதிரீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் கையிருப்பினை பெறுமானம் கணிக்கையில் கிரயம் மற்றும் நிகர தேறிய பெறுமானம் ஆகிய இரண்டில் குறைந்த பெறுமானத்திற்கு இறுதிக் கையிருப்பு அளவிடப்பட வேண்டியபோதிலும் கம்பெனி அதற்கமைவாக செயலாற்றியிராமை காரணமாக இறுதி முடிவுத் தேயிலைக் கையிருப்பு ரூ. 7,028,473 ஆல் அதிகமாக கணக்குப் பதியப்பட்டிருந்தது. அதனால் மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கிடைத்த வட்டி வருமானம் ரூ. 11,988,443 ஆக அமைந்தபோதிலும் காசுப்பாய்வுக் கூற்றினைத் தயாரிக்கையில் முதலீட்டு நடவடிக்கைகளின்கீழ் அது ரூ. 14,724,355 ஆக காட்டப்பட்டிருந்தது. மேலும் உயிரியல் சொத்துக்களை கையகப்படுத்தலிலான செலவு ரூ. 96,917 குறைவாக குறிப்பு பதியப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் காசுப்பாய்வுக் கூற்றினைத் தயாரிக்கையில் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட வருமான வரித்தொகை காட்டப்படவேண்டியபோதிலும் காசுப் பாய்வுக் கூற்றில் ரூ. 3,422,829 ஆக அமைந்த பொருளாதார சேவைகள் கட்டணப் பெறுமதி காட்டப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூ. 2,550,000அக அமைந்த களுபோவிட்டியான மற்றும் தேரங்கல தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகள் 1994 ஆம் ஆண்டில் கையகப்படுத்திய பின்னர் மீள்கணிப்பீடு செய்து நிதிக்கூற்றுகளில் எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 74 (ஒ) பந்தியின் பிரகாரம் பொறுப்புக்களுக்கான பிணையங்களாக வைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியபோதிலும், கம்பெனி 2016 இல் ரூ. 78,000,000 தொழிற்படு மூலதனக் கடன்பெறுகையில் பிணையமாக வைத்த களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை அமைந்துள்ள காணி சம்பந்தமாகவும் வங்கி மேலதிகப் பற்றினை பெற்றுக்கொள்ளும்போதும் பிணையமாக வைத்த ரூ. 94,360,821 ஆக அமைந்த நிலையான வைப்புகள் சம்பந்தமாகவும் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தி இருக்கவில்லை.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயனுறுதிமிக்க ஆயுட்காலம் வருடந்தோறும் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக முழுமையாக தேய்மானம் கழித்து நிறைவுசெய்யப்பட்டுள்ள ரூ. 238,933,334 ஆக அமைந்த சாதனமும் பொறித்தொகுதியும், தளபாடங்களும் பொருத்திகளும், அலுவலக உபகரணங்களும் மோட்டார் வாகனங்களும் ஆகிய சொத்துக்கள் தொடர்ந்தும் பாவனைக்கு எடுக்கப்பட்டு வருகின்றபோதிலும் மேற்படி மதிப்பீடுசெய்யப்பட்ட கோளாறினை இலங்கை கணக்கீட்டுத் தரநியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் திருத்தியமைத்து சரியான கொண்டுசெல்லல் பெறுமானத்தை நிதிக்கூற்றுகளில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

(ஏ) 2014 இல் ரூ. 1,000,000 இற்கு விற்றொழிக்கப்பட்ட தேயிலை உலர்த்திக் கருவிக்கான கிரயமும் திரண்ட மீதியும் மீளாய்வாண்டின் இறுதிவரை கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கம்பெனிக்கு எதிராக ஊழியரொருவரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் கம்பெனி ரூ. 2,814,705 செலுத்தவேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. அதற்காக கம்பெனி ஒரு மேன்முறையீட்டினை சமர்ப்பித்து தீர்ப்பின்படி செலுத்தவேண்டிய தொகையை கொட்டபொல தொழில் நியாயமன்றில் வைப்புச்செய்து வருமதியான வைப்புக்கள் என்றவகையில் நிதிக்கூற்றுகளில் காட்டியிருந்த போதிலும் அதன் காரணமாகத் தோன்றக்கூடிய பொறுப்பு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் மாறாமல் நிலவுகின்ற கூட்டுத்தொகை ரூ. 6,059,340 ஆக அமைந்த வர்த்தக மற்றும் பிற வருமதிகளின் மீதிகளுக்கான ஐயக்கடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) கிராகம தோட்டத்தில் இருந்து கம்பெனிக்குச் செலுத்தவேண்டிய பணத்தொகை கிடையாதென கடந்த வருடத்திலும் மீளாய்வாண்டிலும் மீதியை உறுதிப்படுத்தல் கடிதங்களின்படி காட்டப்பட்டிருந்தபோதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் அந்த கம்பெனியிடமிருந்து ரூ. 1,046,771 வருமதியானதாக காட்டப்பட்டிருந்தது.

(ஔ) வர்த்தக மற்றும் பிற வருமதியான கடன்படுனர் மீதிகளின்கீழ் காட்டப்பட்டிருந்த ரூ. 562,644 ஆக அமைந்த தொங்கல் கணக்கு மீதி மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்க்கப்படாதிருந்தது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இவ்வறிக்கையின் நிதியறிக்கைகளின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்பதுடன் பொருத்தமானதென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுந்தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தலும் நியாயமானவகையில் சமர்ப்பித்தலும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களின்றி நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளை தயாரிக்கையில் கம்பெனியை இடையறாமல் பேணிவருவதற்கான இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் கம்பெனியை ஒழித்துக்கட்ட கருதுமாயின் அல்லது வேறு மாற்றுவழிகள் இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்திவிட நடவடிக்கை மேற்கொண்டாலேயொழிய இடையறாத வழியுரிமையின் அடிப்படையின்பேரில் கணக்குப் பதிதல் மற்றும் கம்பெனியின் இடையறாத வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணர்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பெனியின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு ஆளுந்தரப்பினரால் வகிக்கப்படுதல் வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம் கம்பெனியின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுகளை தயாரிக்க இயலுமானதாக அமையத்தக்கவகையில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி உரியவகையில் பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணிவரப்படல் வேண்டும்.

1.4 நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றனவென்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளிட்ட கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைகின்றபோதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்கையில் அது எல்லாவேளைகளிலும் பொருண்மையான பிறழ்கூற்றுகளை வெளிப்படுத்திக் கொள்கின்றதென்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடிகளினதும் தவறுகளினதும் தனியான அல்லது கூட்டான வகையிலான தாக்கம் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்பவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கமேற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் தீர்ப்புகள் மற்றும் தொழில்சார்ரீதியான ஐயப்பாடுகளைக் கொண்டதாக இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்:

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் அபாயநேர்வுகளை இனங்காண்கையிலும் மதிப்பீடுசெய்கையிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடவடிக்கைமுறைகளை திட்டமிடுவதன் மூலமாக மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றுகின்ற அபாயநேர்வுகளை தவிர்த்துக்கொள்ள போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றுகளினால் இடம்பெறுகின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியால் ஏற்படுகின்ற தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவதோடு மறைசூழ்ச்சி, போலியாவணம் புனைதல், கருத்தொன்றிய கைவிடல்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவறவிடுதல் மோசடி தோன்றக் காரணமாக அமைகின்றன.
- சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடவடிக்கைமுறைகளைத் திட்டமிடும்பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்துணர்வு பெறப்பட்டபோதிலும் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதி பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடக் கருதுவதில்லை.
- முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் நியாயமானதன்மையை மதிப்பீடுசெய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக கூட்டுத்தாபனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய பொருண்மையான நிச்சயமற்றதன்மைகள் உள்ளனவா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய அடிப்படையை பிரயோகித்தலின் ஏற்புடையதன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்றதன்மை உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனஞ் செலுத்தப்பட்டதோடு மேற்படி வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக அமையாவிடின் எனது அபிப்பிராயம் மறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் பேரில் இடையறாத வழியுரிமை முடிவடையக்கூடும்.
- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளை சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு இலக்காக்கப்பட்டதோடு அதற்கு அடிப்படையாக

அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவகையிலும் நியாயமானவகையிலும் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடுசெய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடித்தல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி ஆளுந் தரப்பினர் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 2007 இன் 7 ஆம் இலக்கமுடைய கம்பெனிகள் சட்டத்தினதும் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமான சிறப்பேற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2007 இன் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 163(1) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகளுக்கிணங்க எனது அறிக்கையில் "கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை" பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக கணக்காய்வுக்கு அவசியமான அனைத்துவிதமான தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு எனது பரிசோதனையில் புலப்படுகின்ற விதத்தில் முறையான நிதியறிக்கைகளை கூட்டுத்தாபனம் பேணிவந்திருந்தது.
- கம்பெனியின் நிதிக்கூற்றுகள் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 151 வது பிரிவில் காட்டப்பட்டுள்ள அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாடுகளுக்கிணங்க கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்ததாக அமைகின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாட்டுக்கிணங்க முந்திய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் பேரிலும் அளவுசார் விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வகையிலும் கீழே குறிப்பிட்ட அவதானிப்புகள் நீங்கலாக வெளிப்படுத்தும் அளவுக்கு எதுவும் எனது கவனத்திற்கு இலக்காகவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாட்டுக்கிணங்க கம்பெனியின் ஆளுகைச் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு கம்பெனி தொடர்பான ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியான அல்லது வேறுவிதமான பொதுவான தொழில்முயற்சித் தன்மைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளமை.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாட்டுக்கிணங்க கீழே குறிப்பிட்ட அவதானிப்புகள் நீங்கலாக ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது கம்பெனியின் ஆளுகைச் சபையினால் பிரகடனஞ் செய்யப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு அமைவாக அல்லாமல் செயலாற்றி உள்ளமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு	அமைந்தொழுகாமை
(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்கமுடைய பகிரங்க தொழில்முயற்சிகள் சுற்றிக்கை	மனித வள முகாமைத்துவத்திற்கான சட்டதிட்டங்களை ஆக்குதலுடன் தொடர்புடைய நடவடிக்கைமுறை கையேட்டினைத் தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெறப்படவேண்டியபோதிலும் கம்பெனியால் அதற்கமைவாக செயலாற்றப்பட்டிருக்கவில்லை.
(ஆ) பிஈடி 03/2018 இலக்கமும் 2018 திசெம்பர் 07 ஆந் திகதியும்கொண்ட பகிரங்க தொழில்முயற்சிகள் சுற்றிக்கை	2017 நிதியாண்டில் நட்ட நிலைமையைப் பதிவுசெய்துள்ள மற்றும் மேற்படி நட்டத்தன்மையை 2018 நிதியாண்டில் குறைத்துக் கொள்ளத்தவறிய கம்பெனிகளின் ஊழியர்களுக்காக ஓர் ஊழியருக்கு ரூ. 3,000 வீதம் செலுத்தவேண்டிய மிகையூதியம் ரூ. 501,000 ஆக அமைந்தபோதிலும் ஏற்புடைய எல்லையை விஞ்சி ரூ. 1,665,978 மிகையூதியமாக செலுத்தப்பட்டிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாட்டுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்பு நீங்கலாக கம்பெனியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு அமைவாக அல்லாதவகையில் செயலாற்றி உள்ளமை.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாட்டுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்பு நீங்கலாக கம்பெனியின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறன் கொண்டதாக மற்றும் பயனுறுதிமிக்கதாக காலப்பகுதிக்குள் சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகைசெய்து பயன்படுத்தியிராமை.

3. பிற கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) தேயிலைச்சபையின் அளவுகோல்களுக்கிணங்க ஈடுபடுத்திய 100 கிலோ கிறாம் பச்சைக் கொழுந்தில் இருந்து குறைந்தபட்சம் 21.5 கிலோ கிறாம் உற்பத்தி மட்டத்தைப் பேணிவர வேண்டியபோதிலும் மீளாய்வாண்டில் கம்பெனிக்குச் சொந்தமான 04 தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்தி அந்த மட்டத்தை அடைந்திராமை காரணமாக பச்சைக் கொழுந்துக்காக ரூ. 24,101,145 சிக்கனமற்றவகையில் செலவிடப்பட்டிருந்தது. அதைப்போலவே மீளாய்வாண்டில் தரத்தில் உயர்ந்த பச்சைத் தேயிலைக் கொழுந்தினைப் பெற்றுக்கொள்வதற்காக "உன்னதமான கொழுந்து எண்ணக்கருவின" கீழ் ரூ. 1,566,580 செலவிடப்பட்டிருந்தபோதிலும் எதிர்பார்த்த நோக்கங்களை அடையமுடியாமல் போயிற்று.

(ஆ) கம்பெனிக்கு சொந்தமான தேயிலைத் தொழிற்சாலைகள் மீளாய்வாண்டில் உற்பத்திக் கொள்திறனைவிட தாழ்ந்த மட்டத்தில் இயங்கிவருவது அவதானிக்கப்பட்டதோடு ஹினிதும மற்றும் மெணிக்திவெல தொழிற்சாலைகள் முறையே நூற்றுக்கு 71 மற்றும் நூற்றுக்கு 72 சதவீத குறைப்பயன்பாட்டு மட்டத்தில் நிலவியது. ஹினிதும மற்றும் தேரங்கல தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான கொழுந்து வழங்கலை மேம்படுத்தும் நோக்கத்துடன் மீளாய்வாண்டில் கொழுந்து வழங்கலாளர்களுக்கு பச்சைக் கொழுந்திற்கான ஊக்குவிப்புப்படியாக முறையே ரூ. 1,531,453 மற்றும் ரூ. 1,543,417 செலுத்தப்பட்டிருந்தபோதிலும் எதிர்பார்த்த நோக்கம் ஈடேறவில்லை.

(இ) KTFL/1419/2019 இலக்கமும் 2019 மார்ச்சு 28 திகதியும்கொண்ட பணிப்பாளர்சபை தீர்மானத்திற்கிணங்க கம்பெனியின்கீழ் நிலவுகின்ற தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்தியிலான குறைபாடுகளை இனங்காணல் மற்றும் இலாபமீட்டாத தேயிலைத் தொழிற்சாலைகளை இலாபமீட்டுகின்ற நிலைமைக்கு மாற்ற தொழிற்பாட்டு மதியுரையாளரொருவர் ஒருவருடத்திற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். ஆயினும் தொழில் அளபுருக்களில் குறிப்பிடப்பட்ட தேயிலைக் கொழுந்தினைப் பெற்றுக்கொள்ளல், உற்பத்திச் செயற்பாங்கு, தேயிலை ஏலவிற்பனை மற்றும் உள்நாட்டு – வெளிநாட்டு தேயிலை சந்தைப்படுத்தல் அலுவல்கள் ஆகிய பணிகளில் முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை என்பதோடு 8 மாதங்களின் பின்னர் மதியுரையாளர் சேவையிலிருந்து விலகிச்செல்லும் தருணமளவில் அவருக்காக ரூ. 1,602,040 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) கம்பெனியின் நிதிசார் அவசியப்பாடுகளை ஈடேற்றிக் கொள்வதற்காக 2015/16 ஆம் ஆண்டில் நிலையான வைப்புகளை பிணை வைப்பாகப் பெற்று மேலதிகப்பற்று வசதிகள் பெறப்பட்டிருந்ததோடு அவ்வருட இறுதியில் நிலவிய ரூ. 63,067,584 ஆக அமைந்த மேலதிகப்பற்று மீதி மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூ. 87,055,800 வரை அதிகரித்திருந்தது. அதனால் 2019/20 ஆம் ஆண்டில் மேலதிகப்பற்று வட்டி ரூ. 13,509,808 செலுத்தப்பட்டிருந்ததோடு தேறிய நிதிசார் வருமானம் எதிர்க்கணிய மீதியாக அமைய அது காரணமாக அமைந்திருந்தது. எனவே கம்பெனியின் நிதிநிலைமையை சாதகமான வகையில் பேணிவர கம்பெனி தவறியிருந்தது.

(உ) கம்பெனி 2015 ஆம் ஆண்டில் தேயிலைச் சக்தி நிதியத்திற்கு வருடாந்தம் நூற்றுக்கு 11 சதவீத வட்டி வீதத்தில் 50 மில்லியன் ரூபாவினை வழங்கியிருந்ததோடு ரூ. 59,532,264 ஐ செலவிட்டு தேயிலைச் சக்தி நிதியத்திற்குச் சொந்தமான மெணிக்திவெல காணியில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 19/0743/117/024 இலக்கமும் 2019 மார்ச்சு 19 திகதியும்கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கடன்தொகை, சம்பந்தப்பட்ட வட்டி மற்றும் கம்பெனி செலவிட்டிருந்த அபிவிருத்திச் செலவுகளுக்காக ஹினிதும மற்றும் மெணிக்திவெல தொழிற்சாலைகளின் சொத்துவத்தை சட்டமுறையாக கம்பெனிக்கு கையேற்பதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. ஆயினும் மீளாய்வாண்டின் இறுதி வரை சொத்துவத்தைக் கையேற்று இருக்கவில்லை என்பதோடு வருடாந்தம் ரூ. 5,500.000 வீதப்படி வருமதியான வட்டியும் கணக்குப் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தேயிலைச் சக்தி நிதியம் ஆரம்பித்த ஹினிதும ஹில்ஸ் மற்றும் மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலைகளை உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கம்பெனிக்கு கையளித்து, இந்த இரண்டு தொழிற்சாலைகளையும் பொது திறைசேரிக்குச் செலவுச்சுமையின்றி இலாபகரமானதாகப் பேணிவர அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் கம்பெனியால் மேற்கொள்ளப்படல் வேண்டுமென 19/0743/117/024 இலக்கமும் 2019 மார்ச்சு 19 திகதியும்கொண்ட அமைச்சரவைத் தீர்மானம் மூலமாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் 2015 ஆம் ஆண்டில் கம்பெனிக்கு இந்த தொழிற்சாலைகளை வழங்கியதன் பின்னர் மீளாய்வாண்டு வரை இடையறாமல் நட்ட நிலைமை நிலவியதோடு திரண்ட நட்டம் ரூ. 92,572,104 ஆக அமைந்தது.

(எ) 2003 ஆம் ஆண்டில் பீசீசீ லங்கா கம்பெனிக்கு ரூ. 10,000,000 கடன்தொகை நூற்றுக்கு 22 வீத வட்டி வீதத்தின் அடிப்படையில் 12 தவணைகளில் அறவிட்டுக்கொள்ளும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தபோதிலும் எனினும் ஒரு தவணையையேனும் அறவிட்டுக்கொள்ள இயலாமல் போயுள்ளமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டிய முழுத்தொகை ரூ. 55,646,517 ஆக அமைந்தது.

(ஏ) 2009 ஆம் ஆண்டில் இருந்து பிரத்தியேக தேயிலை தரகர் நிறுவனமொன்றிடமிருந்து கம்பெனிக்கு ரூ. 798,641 வருமதியாக நிலவியதோடு அதனை அறவிட்டுக்கொள்ளவோ முறைசார்ந்த அங்கீகாரத்துடன் பதிவேடுகளிலிருந்து பதிவழிக்கவோ மீளாய்வாண்டின் இறுதிவரையும் இயலாமல் போயிற்று.

(ஐ) கம்பெனிக்குச் சொந்தமான ஹினிதும மற்றும் தேரங்கல தேயிலைத் தொழிற்சாலைகள், கொழுந்து வழங்கப்பட முன்னர் கொழுந்து வழங்கலாளர்களுக்கு 2014 ஆம் ஆண்டில் முறையே ரூ. 891,681 மற்றும் ரூ. 220,464 முற்பணமாக செலுத்தப்பட்டிருப்பினும் வழங்கலாளர்கள் கொழுந்தினை வழங்காமையால் அந்த மீதிகளை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிட்டுக்கொள்ள இயலாமல் போயிற்று.

(ஒ) உள்நாட்டு சந்தைப்படுத்தல் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் 2019 ஏப்பிறல் மாதத்தில் "நுவரெலியா வசந்த உதயம்" களியாட்டம் மற்றும் ஏனைய வர்த்தக கண்காட்சிகளுக்காக ரூ. 966,860 செலவிடப்பட்டிருந்தது. ஆயினும் முந்திய வருடத்துடன் சார்புரீதியாக மீளாய்வாண்டில் சந்தைப்படுத்தல் வருமானம் ரூ. 10,577,492 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது. இத்தகைய செலவு உறப்படுதல் சந்தைப்படுத்தல் நிலையத்தில் உள்ளூர் தேயிலை விற்பனை வருமானம் அதிகரிக்க காரணமாக அமையவில்லை.

(ஓ) கம்பெனி களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலைக்கு 2014 ஆம் ஆண்டில் ரூ. 23,414,257 இற்கு கொள்வனவுசெய்த நீர் வெப்ப பிறப்பாக்கி இயந்திரத்திற்கான வழங்கல் நிபந்தனைகளின் பிரகாரம் வழங்கப்படவேண்டிய 02 றேடியேட்டர் கருவிகளை வழங்காமை காரணமாக ரூ. 1,566,002 ஐ செலுத்தாதிருக்க பணிப்பாளர்சபை தீர்மானித்திருந்தபோதிலும் இந்த மீதி சென்மதியாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

டபிள்யு.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் இலாபம்/(நட்டம்) மற்றும் பிற விரிவான வருமானம் பற்றிய கூற்று

மார்ச்சு 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்	குறிப்பு	2019/2020 ரூ.	2018/2019 ரூ.
வருமானம்	3	**937,789,275.06**	971,792,180
விற்பனைக் கிரயம்	4	**(845,680,912.52)**	(985,257,849)
மொத்த இலாபம்/(நட்டம்)		**92,108,362.54**	(13,465,669)
பிற தொழிற்பாட்டு வருமானம்	5	**7,201,625.87**	8,419,609
தொழிற்பாட்டு செலவினங்களுக்கு முந்திய இலாபம்/(நட்டம்)		**99,309,988.41**	(5,046,060)
நிருவாகச் செலவினம்	6	**(50,712,394.91)**	(42,048,961)
விற்பனை, விநியோக செலவினம்	7	**(400,677.07)**	(3,116,553)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலான இலாபம்/(நட்டம்)		**48,196,916.43**	(50,211,574)
நிதி வருமானம்	8.1	**14,724,355.11**	15,843,193
நிதி செலவினம்	8.2	**(19,653,694.91)**	(18,579,650)
தேறிய நிதி வருமானம்		**(4,929,339.80)**	(2,736,456.54)
வரிவிதிப்பக்கு முந்திய தேறிய இலாபம்/(நட்டம்)		**43,267,576.63**	(52,948,030.79)
வரிவிதிப்பு	9	**(5,535,371.27)**	4,167,928
வரி விதிப்புக்கு பிந்திய தேறிய இலாபம்/(நட்டம்)		**37,732,205.36**	(48,780,102.34)
பங்கொன்றுக்கான ஈட்டல்	10.1	**8.19**	(10.52)
வரி விதிப்புக்கு பிந்திய தேறிய இலாபம்/(நட்டம்)		**37,732,205.36**	(48,780,102)
இளைப்பாற்று நன்மைகளிலான ஆயுட்கணிப்பு (ஈட்டல்கள்)/இழப்புகள்		**(1,858,427.00)**	685,248
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்		**35,873,778.36**	(48,094,854)

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் நிதி நிலைமை பற்றிய கூற்று

மார்ச்சு 31 இல் உள்ளவாறு களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்	குறிப்பு	2019/2020 ரூ.	2018/2019 ரூ.
சொத்துக்கள்			
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி	11	**193,095,557.12**	224,148,137
உயிரியல்சார் சொத்துக்கள்	12	**4,869,910.60**	3,048,420
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		**197,965,467.72**	227,196,557
நடைமுறைச் சொத்துக்கள்			
சரக்குத் தொக்குகள்	13	**164,264,491.51**	102,791,784
பீசீசீ லங்கா லிமிரெட்டிடமிருந்து வருமதியான கடன்		**55,646,517.05**	52,910,605
வர்த்தக மற்றும் பிற வருமதிகள்	14	**26,240,371.13**	46,319,954
வருமதியான வருமான வரி	25	**10,849,289.93**	13,789,363
குறுங்கால முதலீடுகள்	15	**167,092,023.73**	164,832,670
காசு மற்றும் காசுக்கு சமமானவை	16	**5,559,075.89**	3,941,337
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**429,651,769.24**	384,585,713
மொத்த சொத்துக்கள்		**627,617,236.98**	611,782,270
உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்			
உரிமைப்பங்கு			
வெளிப்படுத்திய மூலதனம்	17	**46,375,070.00**	46,375,070
ஒதுக்கங்கள்	18	**395,454,945.18**	359,581,167
மொத்த உரிமைப்பங்கு		**441,830,015.18**	405,956,237
நடைமுறையல்லா பொறுப்புகள்			
இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள்	19	**16,275,791.50**	11,866,491
கடனெடுத்தல்களும் இரவல்களும்	20	**4,599,999.96**	14,563,267
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு	24	**5,832,365.94**	296,995
மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்		**26,708,157.40**	26,726,752
நடைமுறைப்பொறுப்புகள்			
வர்த்தக மற்றும் பிற சென்மதிகள்	21	**62,059,997.42**	79,040,300
கடனெடுத்தல்களும் இரவல்களும்	20	**9,963,266.96**	18,350,000
வங்கி மேலதிகப்பற்று	22	**87,055,800.01**	81,708,981
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		**159,079,064.39**	179,099,281
மொத்த உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்		**627,617,236.98**	611,782,270

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் அவசியப்பாடுகளுக்கு அமைவாக நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பதை நாங்கள் சான்றுப்படுத்துகிறோம்.

முகாமைத்துவப் பணிப்பாளர் பதில் நிதிப் பணிப்பாளர்

இந்த நிதிக்கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிக்கின்ற பொறுப்பு பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும்.

பணிப்பாளர் சபையின் சார்பாக கையொப்பமிட்டது.

தலைவர் பணிப்பாளர்

2020 யூலை 17 ஆந் திகதி
கொழும்பு

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

மார்ச்சு 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்	வெளிப்படுத்திய மூலதனம் ரூ.	பொது திறைசேரி ரூ.	மூலதன ஒதுக்கங்கள் ரூ.	தடுத்துவைத்த இலாபம் ரூ.	மொத்தம் ரூ.
2018 ஏப்பிறல் 01 இல் உள்ளவாறான மீதி – தடுத்துவைக்கப்பட்டது	46,375,070.00	–	600,000.00	407,076,021.16	454,051,091.16
ஆண்டுக்கான தேறிய இலாபம்/(நட்டம்)	–	–	–	(48,780,102.34)	(48,780,102.34)
பிற விரிவான வருமானம்	–	–	–	685,248.00	685,248.00
2019 ஏப்பிறல் 01 இல் உள்ளவாறான மீதி – தடுத்துவைக்கப்பட்டது	46,375,070.00	–	600,000.00	358,981,166.82	405,956,236.82
ஆண்டுக்கான தேறிய இலாபம்/(நட்டம்)	–	–	–	37,732,205.36	37,732,205.36
பிற விரிவான வருமானம்	–	–	–	(1,858,427.00)	(1,858,427.00)
2020 ஏப்பிறல் 01 இல் உள்ளவாறான மீதி	46,375,070.00	–	600,000.00	394,854,945.18	441,830,015.18

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் காசுப் பாய்வு பற்றிய கூற்று

மார்ச்சு 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்	குறிப்பு	2019/2020 ரூ.	2018/2019 ரூ.
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசு			
வரிவிதிப்பிற்கு முன்னர் தேறிய இலாபம்/(நட்டம்)		**43,267,577**	(52,948,031)
சீராக்கல்கள்:			
தேய்மானம்		**33,428,195**	33,247,040
இளைப்பாற்று நன்மைக் கிரயத்திற்கான எற்பாடுகள்		**3,093,374**	2,786,921
சொத்துக்கள் விற்றொழித்தலிலான இலாபம்		**–**	–
கழித்தெழுதிய ஈஎஸ்சீ		**6,362,903**	–
வட்டி வருமானம்		**(14,724,355)**	(15,843,193)
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)		**71,427,693**	(32,757,263)
சரக்குத்தொக்குகளிலான (அதிகரிப்பு)/வீழ்ச்சி		**(61,472,707)**	51,808,927
வர்த்தக மற்றும் பிற வருமதிகளிலான (அதிகரிப்பு)/வீழ்ச்சி		**20,079,583**	(3,323,051)
வர்த்தக மற்றும் பிற சென்மதிகளிலான அதிகரிப்பு/(வீழ்ச்சி)		**(16,980,303)**	(21,794,367)
தொழிற்பாடுகளிலிருந்து/(ஈடுபடுத்திய) பிறப்பித்த காசு		**13,054,266**	(6,065,754)
செலுத்திய பணிக்கொடை		**(542,500)**	(3,595,266)
செலுத்திய வரி		**(3,422,829)**	(4,359,988)
தொழிற்பாடுகளிலிருந்து/(ஈடுபடுத்திய) பிறப்பித்த தேறிய காசு		**9,088,936**	(14,021,007)
தொழிற்பாடுகளிலிருந்து/(ஈடுபடுத்திய) பிறப்பித்த காசுப் பாய்வு			
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி கொள்ளல்		**(2,375,616)**	(15,628,665)
உயிரியல்சார் சொத்துக்களின் கொள்ளல்		**(1,821,490)**	86,617
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி விற்றொழித்தல்		**–**	–
கிடைத்த வட்டி		**14,724,355**	15,843,193
நிதிசார் சொத்துக்களின் தேறிய மாற்றங்கள்		**(4,995,266)**	9,132,464
முதலீட்டுத் தொழிற்பாடுகளிலிருந்து/(ஈடுபடுத்திய) பிறப்பித்த தேறிய காசு		**5,531,983**	9,433,609
நிதிசார் தொழிற்பாடுகளிலிருந்து/(ஈடுபடுத்திய) பிறப்பித்த தேறிய காசு			
கடன் மற்றும் இரவல்களிலான நடைமுறைகள்		**(18,350,000)**	(18,346,500)
நிதிசார் தொழிற்பாடுகளிலிருந்து/(ஈடுபடுத்திய) பிறப்பித்த தேறிய காசு		**(18,350,000)**	(18,346,500)
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் தேறிய அதிகரிப்பு/(வீழ்ச்சி)		**(3,729,081)**	(22,933,898)
ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை		**(77,767,644)**	(54,833,746)
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை	16	**(81,496,724)**	(77,767,644)

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் - கணக்கீட்டுக் கொள்கைகள்

1. அறிக்கையிடும் அமைப்பாண்மை

1.1 கூட்டாண்மைத் தகவல்கள்

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 1992 செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 2009 யூன் 16 ஆந் திகதி மீள் பதிவு செய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புடைய இலங்கையை வதிவிடமாகக்கொண்ட கம்பெனியாகும்.

கம்பெனியின் பதிவுசெய்த அலுவலகம் இலக்கம் 556, நாகஹமுல்ல, பெலவத்த, தலங்கம தெற்கு எனும் முகவரியில் அமைந்துள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

தேயிலையை செய்கை பண்ணுதலும் உற்பத்தியும் அத்துடன் தேயிலைச் செய்கையாளர்களிடமிருந்தும் தமக்கே சொந்தமான தோட்டங்களிலிருந்தும் கொள்வனவுசெய்த தேயிலையை சந்தைப்படுத்துவதுமே கம்பெனியின் பிரதான தொழிற்பாடுகளாகும்.

1.3 பணிப்பாளர்கள்

2020 மார்ச்சு 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகளை பணிப்பாளர்சபை இத்துடன் சமர்ப்பிக்கின்றது. நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர்சபை பொறுப்புக்கூறல் வேண்டும்.

2020 மார்ச்சு 31 இல் கம்பெனியின் பணிப்பாளர்கள் கீழே காட்டப்பட்டவாறு அமைவர்.

திருமதி டபிள்யு.ஏ.ஐ. சுகததாச

திரு. ஹேமால் கஸ்தூரி ஆரச்சி

அரசாங்கம் மாறியதன் காரணமாக பின்வரும் பணிப்பாளர்கள் இராஜிநாமா செய்தார்கள்.

திரு. அமல் நிஷாந்த சில்வா புஸ்ஸல்ல - தலைவர்
(2019.12.09 இல் இராஜிநாமா செய்தார்)

திருமதி கல்யாணி சத்தரசிங்க - நிறைவேற்றுப் பணிப்பாளர்
(2019.12.01 இல் இராஜிநாமா செய்தார்)

திரு. பி.இராசையா
(2019.12.01 இல் இராஜிநாமா செய்தார்)

திரு. துசித ரத்நாயக்க
(2020.03.12 இல் இராஜிநாமா செய்தார்)

திரு. எம்.எம்.டி. திலகரத்ன
(2019.11.27 இல் இராஜிநாமா செய்தார்)

1.4 கம்பெனி செயலாளர்கள்

கோப்பரேட் சேர்விசஸ் (தனியார்) கம்பெனி
216, த சேரம் பிளேஸ்,
கொழும்பு 05.

1.5 பதிவுசெய்த அலுவலகம்

இலக்கம் 556,
நாகஹமுல்ல,
பெலவத்த, தலங்கம தெற்கு.

1.6 கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இலக்கம் 306/72,
பொல்துாவ வீதி,
பத்தரமுல்ல.

1.7 நிதிக் கூற்றுகளை வெளியிடுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதி

இந்த நிதிக் கூற்றுகளை வெளியிடுவதற்காக பணிப்பாளர் சபையினால் 2020 யூலை மாதம் 17 ஆந் திகதி அதிகாரம் வழங்கப்பட்டது.

2. பொதுவான கொள்கைகள்

2.1 தயாரித்தலுக்கான அடிப்படை

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் கம்பெனியின் நிதிக் கூற்றுகள் நிதி நிலைமை பற்றிய கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்வுக் கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளையும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது. இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தால் விதிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவே இந்த நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 அளவீட்டுக்கான அடிப்படை

சம்பந்தப்பட்ட குறிப்புகளின் கீழ் நியாயமான பெறுமதியுடன் ஏற்புடைய பொருத்தமான
வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் தவிர இந்த நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய மரபின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. சொத்துக்களும் பொறுப்புக்களும் அவற்றின் தன்மைக்கிணங்கவும் சார்புரீதியான திரவத்தன்மை பிரதிபலிக்கப்படுகின்ற விதத்திலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகளில் இனங்காணப்பட்டுள்ள அளவுகளின்பேரில் மிகவும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளை பிரதியீடு செய்கையில் முக்கியமான மதிப்பீட்டுத்துறைகள், நிச்சமற்றதன்மை மற்றும் தீர்வுக்கட்டமான தீர்மானங்கள் பற்றிய தகவல்கள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.3 வரி விதிப்பு

(அ) நடப்பு வரி

நிதிக் கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு வருமான வரிக்கான ஏற்பாடுகள் வருமானம் மற்றும் செலவு அடிப்படை அம்சங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு 2006 இன் 10 ஆம் இலக்கமுடைய உள்நாட்டு அரசிறை சட்டத்தினதும் அதன் அடுத்தடுத்த திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) பிற்போடப்பட்ட வரி

பொறுப்புகள் முறையியலை பிரயோகித்து பிற்போடப்பட்ட வரியானது நிதிசார் அறிக்கையிடல் பணிகள் மற்றும் வரிப் பணிகளுக்காக பாவிக்கப்படுகின்ற அளவுகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கிடையிலான கொண்டுசெல்லல் அளவுகளில் தற்காலிக மாற்றங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தே வழங்கப்பட்டுள்ள. பிற்போடப்பட்ட வரியானது அறிக்கையிடல் திகதியாகும் வேளையில் விதிக்கப்பட்டுள்ள சட்டத்தை அடிப்படையாகக்கொண்டு தற்காலிக மாற்றங்களை மாற்றியவிடத்து அவற்றுக்காக பிரதியீடுசெய்ய எதிர்பார்க்கப்படுகின்ற வரி வீதத்தின் அடிப்படையிலேயே கணிக்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரியானது அக்கால இடைவெளிகளுடன் சார்புரீதியாக பயன்பாட்டுக்கு எடுக்கக்கூடிய எதிர்கால வரி அறவிடக்கூடிய இலாபம் நிலவுகின்ற நிகழ்தகவு உள்ள அளவுக்கே ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மீளாய்வு செய்யப்படுவதோடு இணை வரி நன்மைகளை அடைவதற்கான வாய்ப்பு தொடர்ந்தும் இல்லாமல் போகின்ற அளவுக்கு குறைக்கப்படும்.

2.4 சொத்துக்களின் மதிப்பீடும் அவற்றை அளவிடுகின்ற அடிப்படையும்

2.4.1 ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி திரண்ட தேய்மானம் மற்றும் பெறுமதியின் ஏதேனும் சேதம் இருப்பின் அதனைக் கழித்து நியாயமான பெறுமானத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவங்கள் அல்லது நிலைமைகள் மாறுவதன் மூலமாக கொண்டுசெல்லல் பெறுமதியை மீள அறவிட இயலாதென்பதை சுட்டிக்காட்டுகின்ற சந்தர்ப்பங்களில் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கொண்டுசெல்லல் பெறுமதி சேதமடைதலுக்காக மீளாய்வு செய்யப்படும். ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் அனைத்துமே முதலில் அவற்றின் கிரயத்தின் அடிப்படையிலேயே அறிக்கையிடப்பட்டுள்ளன. ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் அடுத்தடுத்து மீள் பெறுமானம் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அத்தகைய சொத்துக்களின் ஒட்டுமொத்த தொகுதியுமே நியாயமான பெறுமதியின் அடிப்படையில் மீள்பெறுமானம் செய்யப்படும். ஏதேனும் ஆதனம் மீள்பெறுமானம் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அதன் கொண்டுசெல்லல் பெறுமதி அதிகரித்துள்ளமை இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் முந்திய வருமானக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி ஆதனம் குறைவடைந்தமையாக குறிக்கப்பட்ட சந்தர்ப்பத்தை தவிர்ந்த அதன் மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்தில் நேரடியாகவே வரவு வைக்கப்படுவதோடு அத்தகைய சந்தர்ப்பத்தில் அதிகரிப்பு வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். ஒரே சொத்தின் முந்திய மிகைநிலையை எதிரீடு செய்கின்ற ஏதேனும் மீள்கணிப்பீட்டு பற்றாக்குறையானது அதன் மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்தில் நேரடியாகவே எதிரீடு செய்யப்படுவதோடு ஏதேனும் மிகைநிலை காணப்படின் அது செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

விற்றொழித்தலின்போது விற்பனை செய்யப்பட்ட சொத்துடன் தொடர்புடைய ஏதேனும் மீள்பெறுமான ஒதுக்கம் இருப்பின் அது தடுத்துவைத்த ஈட்டல்களுக்கு சாட்டுதல் செய்யப்படும். ஏதேனும் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி வகையினத்தை மீள்நிறுவுகையில் அல்லது விற்றொழித்தலின்போது அவற்றின் பாவனை மூலமாக எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படுவதில்லையாயின் அவை அகற்றப்பட்டதாக கருதப்படும். அவ்விதமாக சொத்துக்கள் அகற்றப்படுதல் காரணமாக தோன்றுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் அவ்விதமாக அகற்றப்பட்ட ஆண்டின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

(அ) தேய்மானம்

கிரயத்தின் அடிப்படையில் எளிய நேர்கோட்டு வழிமுறையைப் பயன்படுத்துதல் மூலமாக அல்லது இறையிலிக் காணிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளை மதிப்பீடுசெய்தல் மூலமாக மேற்படி சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தில் மேற்படி அளவுகளை பதிவேடுகளிலிருந்து நீக்கும் பொருட்டு தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் கணிப்பீடு செய்யப்படும். சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு அமையும்:

சொத்துக்களின் தொகுதி	வருடங்கள்
கட்டிடங்கள்	20
நீர் மற்றும் மின்சாரம்	20
மோட்டார் வாகனங்கள்	4
சாதனமும் பொறித்தொகுதிகளும்	8
உபகரணங்கள்	8
தளபாடம் மற்றும் பொருத்திகள்	8
கணினி மென்பொருள்	8
வீதிகள்	10
பிற	8
உயிரியல் சொத்துக்கள் (தேயிலை)	30

இறையிலிக் காணிகளுக்கு எல்லையற்ற ஆயுட்காலம் உள்ளதெனக் கருதுவதால் அவற்றுக்கு தேய்மானம் செய்யப்படுவதில்லை.

ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் உசிதமானதெனில் சொத்தின் எஞ்சிய பெறுமதி பயனுள்ள ஆயுட்காலமும் தேய்மானம் கழிக்கும் முறையியலும் மீளாய்வுசெய்யப்பட்டு இணக்கஞ்செய்யப்படும்.

(ஆ) மறுசீரமைப்பு நிதியம்

ஆரம்பத்திலேயே மதிப்பீடு செய்யப்பட்ட செயலாற்றுகை தரத்திலிருந்து எதிர்பார்த்த எதிர்கால பொருளாதார நன்மைகளை இயல்புநிலைக்கு கொண்டுவருதல் அல்லது பேணிவரும்பொருட்டு ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி திருத்தவேலைகள் அல்லது பராமரிப்புக்காக உறப்பட்ட செலவினம் அவ்விதமாக உறப்பட்டவிடத்து செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

2.4.2 உயிரியல்சார்ந்த சொத்துக்கள்

நிறுவனம் கிரய அடிப்படையில் உயிரியல்சார்ந்த சொத்துக்களை ஏற்பிசைவு செய்கின்றது. கம்பெனியின் உயிரியல்சார்ந்த சொத்துக்கள் களுபோவிடிய்யான மற்றும் தேரங்கல தொழிற்சாலைகளின் தேயிலைப் புதர்களை உள்ளடக்குகின்றது. கம்பெனியானது 3 வருடங்கள் வரையான செடிகளை முதிர்ச்சியடையாதவையாகவும் 3 வருடங்களுக்கு மேற்பட்ட செடிகளை முதிர்ச்சியடைந்தவையாகவும் எற்பிசைவு செய்கின்றது.

2.4.3 நிதிசார் சொத்துக்கள் (பெறுதியற்ற)

கம்பெனி முதலில் கடனும் வருமதிகளும் மற்றும் வைப்புகளை அவற்றைப் பிறப்பித்த தினத்திற்கு ஏற்பிசைவு செய்கின்றது. ஏனைய அனைத்துவிதமான நிதிசார் சொத்துக்களும் (இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிர்ணயிக்கப்பட்ட சொத்துக்களை உள்ளிட்டதாக) சாதனத்தின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு கம்பெனி தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திற்கு முதலில் ஏற்பிசைவு செய்யப்படும்.

காசுப்பாய்வு மீது சொத்தின் உடன்படிக்கை உரித்துவம் முடிவுறுகையில் அல்லது நிதிசார் சொத்தின் உரித்துவத்தின் அனைத்து அபாயநேர்வுகளும் பணிக்கொடைகளும் கணிசமானவகையில் சாட்டுதல் செய்யப்படுகின்ற கொடுக்கல் வாங்கலொன்றில் நிதிசார் சொத்தொன்றின் பேரில் உடன்படிக்கை காசுப்பாய்வுகள் கிடைப்பதற்கான உரிமைகள் அதனை சாட்டுதல் செய்கையில் கம்பெனி நிதிசார் சொத்தொன்றின் ஏற்பிசைவு செய்தலை நீக்கும். கம்பெனியால் நிர்மாணிக்கப்படுகின்ற அல்லது தேக்கிவைக்கப்படுகின்ற சாட்டுதல் செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்களின் ஏதேனும் கடப்பாடு தனிவேறான சொத்தாக அல்லது பொறுப்பாக ஏற்பிசைவு செய்யப்படும்.

நிதிசார் சொத்துக்களை வகைப்படுத்துகின்ற கருமத்திற்காக கம்பெனியின் நிதிசார் சொத்துக்களை மதிப்பீடுசெய்தல் ஆரம்ப உள்ளீட்டுத் திகதியான 2019 ஏப்பிறல் 01 திகதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு பின்னர் 2019 ஏப்பிறல் 01 ஆந் திகதிக்கு முன்னர் இனங்காணலை கைவிட்டிராத நிதிசார் சொத்துக்களுக்கு பின்நோக்கிய செயல்விளைவுடையதாக பிரதியீடு செய்துள்ளது. கடன் சாதனங்களின்பேரில் உடன்படிக்கை செய்யப்பட்ட காசுப்பாய்வானது வெறுமனே உள்ளடக்கி இருப்பது ஆரம்பத் தொகை மற்றும் வட்டியுடனா அல்லது சொத்துக்களின் தொடக்க ஏற்பிசைவின்போது நிலவிய விடயங்கள் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையிலான நிலைமைகளின் பேரிலா மதிப்பீடு செய்யப்பட்டது எனும் அடிப்படையிலாகும். இலங்கை கணக்கீட்டுத் தரநியமம் 9 இன் வகைப்படுத்தல் மற்றும் அளவிடுசெய்வதன் அவசியப்பாடுகள் கம்பெனியின் பெறுபேறுகள் மற்றும் நிதிநிலைமைமீது கணியரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை என்பதோடு அதனால் கம்பெனி முந்திய காலஎல்லைகளுக்கான ஒப்பீட்டுரீதியான தகவல்களை மீண்டும் வெளியிடவில்லை.

கம்பெனிவசம் கீழே காட்டப்பட்ட நிதிச் சொத்துக்கள் உள்ளன. (பெறுதியற்ற):

- கடனும் வருமதிகளும்
- காசும் காசுக்கு சமமானவையும்

(அ) கடனும் வருமதிகளும்

கடனும் வருமதிகளும் என்பது முனைப்பான சந்தையில் விலைகளை சமர்ப்பித்திராத நிலையான மற்றும் நிச்சயிக்கக்கூடிய செலுத்துதல்களைக்கொண்ட நிதிசார் சொத்துக்களாகும். அத்தகைய சொத்துக்கள் முதலில் நியாயமான பெறுமதி மற்றும் நேரடியாக உடைமையாக்கிக் கொள்ளக்கூடிய ஏதேனும் கொடுக்கல் வாங்கல் கிரயத்திற்கு ஏற்பிசைவு செய்யப்படும். ஏதேனும் சேதஇழப்பீட்டு நட்டம் கழிக்கப்பட்டு பயனுறுதிமிக்க வட்டி முறையியலைப் பாவித்து மதிப்பிறக்கம்செய்த கிரயத்திலேயே ஆரம்ப ஏற்பிசைவுக்கு அடுத்ததடுத்ததாக கடனும் வருமதிகளும் கணிப்பிடப்படும்.

(ஆ) காசும் காசுக்கு சமமானவையும்

காசுப் பாய்வு சம்பந்தமான ஒருங்கிணைந்த கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் காசு மீதிகளும் மூன்று மாதங்கள் அல்லது அதற்கு குறைவான ஆரம்ப காலமுதிர்வினைக்கொண்ட கேள்வி வைப்புகளை உள்ளடக்கியதாகும். கேள்வியின் பேரில் மீளச்செலுத்தக்கூடிய மற்றும் கம்பெனியின் நிதி முகாமைத்துவத்தின் உள்ளடங்கிய பகுதியாக அமைகின்ற வங்கி மேலதிகப்பற்று காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் ஆக்கக்கூறாக காசுப் பாய்வுகளின் பணிக்காக உள்ளடக்கப்பட்டுள்ளன. காசு மற்றும் காசுக்கு சமமானவை கையிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள வைப்புகளை உள்ளடக்கியதாகும். நேரில் முறையியலை பாவித்து தயாரிக்கப்பட்டுள்ள காசுப் பாய்வுகளின் பணிக்காக காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் ஆக்கக்கூறாக வங்கி மேலதிகப்பற்று உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.4.4 சேதங்கள்

இலாபம் அல்லது நட்டத்தின் மூலமாக நியாயமான பெறுமதியை வகிக்காத நிதிச் சொத்துக்கள் அது சேதமடைந்தமைக்கான புலன்களால் உணரக்கூடிய சான்றுகள் உள்ளனவா என்பதை நிர்ணயிப்பதற்காக ஒவ்வோர் அறிக்கையிடல் திகதிக்கும் மதிப்பீடு செய்யப்படும்.

சொத்தின் ஆரம்ப ஏற்பிசைவுக்குப் பின்னர் நட்ட சம்பவமொன்று நேர்ந்துள்ளமைக்கான புலன்களால் உணரக்கூடிய சான்றுகள் இருப்பின் மற்றும் நம்பிக்கையான வகையில் அளவிடக்கூடிய மேற்படி சொத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்வுகளுக்கு எதிர்மறையான தாக்கத்தை மேற்படி நட்டச் சம்பவம் ஏற்படுத்தி இருப்பின் நிதிச்சொத்தொன்று சேதமடைந்துள்ளது.

கிடைக்கக்கூடியவற்றுக்கான சேதங்கள் பற்றிய சான்றுகளை கம்பெனி கூட்டு மட்டத்தில் கருத்திற்கொள்ளும். இணையான அபாயநேர்வுப் பண்புகளைக்கொண்ட கிடைக்கத்தக்க அனைத்தும் ஒன்றாக தொகுதியாக்கப்படுவதோடு நேர்ந்துள்ள எனினும் இற்றைவரை இனங்காணப்பட்டிராத ஏதேனும் சேதத்திற்காக கூட்டாக மதிப்பீடு செய்யப்படும்.

மதிப்பிறக்கம்செய்த கிரயத்தில் அளக்கப்படுகின்ற நிதிச் சொத்துடன் தொடர்புடைய சேத இழப்பீடு அதன் கொண்டுசெல்லல் பெறுமதி மற்றும் சொத்தின் நிதிப் பயனுறுதிமிக்க வட்டி வீதத்திற்கு கழிவு செய்யப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்வுகளின் நடப்பு பெறுமதிக்குமிடையிலான வித்தியாசமாக கணிப்பீடு செய்யப்படும். நட்டமடைதல் இலாபம் அல்லது நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு கிடைப்பனவுகளுடன் சார்பூரீதியாக கொடுப்பனவு கணக்கில் காட்டப்படும். சேதமடைந்த சொத்தொன்றின் பேரில் வட்டி, கழிவு எதிர்காலத்திற்கு சீராக்கல்கள் ஊடாக தொடர்ச்சியாக ஏற்பிசைவு செய்யப்படும். பின்னர் தோன்றுகின்ற சம்பவமொன்று சேத நட்டப் பெறுமதியை குறைக்க காரணமாக அமையின் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சேத நட்டத்தின் குறைத்தல் மீள்கணிப்பீடு செய்யப்படும்.

2.4.5 சரக்குத்தொக்குப் பண்டங்கள்

சரக்குத்தொகுப் பண்டங்கள் செயற்பாங்கிற்கு உள்ளாக்கிய, செயற்பாங்கிற்கு உள்ளாக்கப்படாத மற்றும் பகுதியளவில் செயற்பாங்கிற்கு உள்ளாக்கிய விவசாய உற்பத்திகள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களை உள்ளடக்கியதாகும். செயற்பாங்கிற்கு உள்ளாக்கிய, செயற்பாங்கிற்கு உள்ளாக்கப்படாத மற்றும் பகுதியளவில் செயற்பாங்கிற்கு உள்ளாக்கிய விவசாய உற்பத்திகள் நிதிக் காலப்பகுதியின் இறுதியில் முழுமையாக செயற்பாங்கிற்கு உள்ளாக்கிய உற்பத்திகளாக கருதப்படுவதோடு நிகர தேறக்கூடிய பெறுமானத்திற்கு மதிப்பீடு செய்யப்படும்.

ஏனைய நுகர்வுப் பொருட்கள் மிகவும் குறைந்த கிரயத்திற்கும் நிகர தேறிய பெறுமானத்திற்குமே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. சரக்குத் தொக்குப் பண்டங்களை விற்பனை செய்கையில் மேற்படி சரக்குத்தொக்குப் பண்டங்களின் கொண்டுசெல்லல் பணத்தொகை சம்பந்தப்பட்ட வருமானம் ஏற்பிசைவு செய்யப்பட்ட காலப்பகுதியில் செலவினமாக கம்பெனியால் ஏற்பிசைவு செய்யப்படும்.

2.5 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

